
CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

மாசி மாதம் 25ம் திகதி
March 09, 2013
மலைமுரசு®
அறைவு 01 இயம் 33
MALAIMURASU
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# ஜெனீவாவில் இந்திய நகர்வை சம்பூர் தீர்மானிக்கும்!!

## – மின்சார சபை ஊழியர் சங்கத் தலைவர் –

ஜெனீவாவில் நிகழ்ந்துவரும் மனிதவுரிமைச் சபையில் இலங்கையை வழிக்குக் கொண்டுவரும் பொறியாக சம்பூர் அனல் மின்நிலைய விடயம் இருக்கும் என இலங்கை மின்சார சபையின் ஊழியர் சங்கமான "லங்கா விதுலி சேவக சங்கமய'' வின் தலைவர் தெரிவித்துள்ளார். (7ம் பக்கம்)



## அதிகளவு மழை வீழ்ச்சியை பதிவு செய்தது திருமலை

கடந்த சில தினங்களாக திருக்கோணமலை மாவட்டத்தில் பரவலாகப் பெய்த மழையால் கடந்தவாரம் அதிக மழைவீழ்ச்சி பதிவான மாவட்டங்களில் முதலிடத்தை திருமலை மாவட்டம் பதிவு செய்துள்ளது.

06.03.2013ம் திகதி புதன்கிழமை நண்பகல் பன்னிரெண்டு.. (7ம் பக்கம்)

## அபிவிருத்தித் திட்டங்களில் முஸ்லிம், தமிழ் பகுதிகள் புறக்கணிப்பு

தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பகுதிகள் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம். சுபியான் தெரிவித்துள்ளார் தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் கடந்த 3ம் திகதி இடம்பெற்றது... (7ம் பக்கம்)

## 18 விவசாயிகள் கௌரவிப்பு

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 28.02.2013 வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.எம். ஹுஸைன் மற்றும் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஆர். கோகுலதாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த விவசாயிகளுக்கு சான்றிதழ்களும் காசோலைகளும் வழங்கி வைத்தனர்.

## "நாங்கள் தனி நாடு கோரிப் போராடவில்லை"

### – எங்கள் பள்ளிவாசல்களை பாதுகாத்துத் தாருங்கள் –

தௌபீக் பா.உ

கடந்த பல தசாப்தங்களாக எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியினருக்கே முஸ்லிம்கள் தம் ஆதரவை நல்கி வந்துள்ளார். (7ம் பக்கம்)

## பெரும்போக நெற்கொள்வனவுக்கு – அரசு தயார் –

பெரும்போக நெற்கொள்வனவை மாவட்டச் செயலாளர்கள் ஊடாக மேற்கொள்வதற்கு அரசு தயாராகி வருகின்றது. இதற்கென 1798.11 மில்லியன் ரூபாய்களை அரச வங்கிகளாக இலங்கை வங்கி (391.59 மி), மக்கள் வங்கி... (7ம் பக்கம்)

## கணனிக்கற்கை நிலையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

தி/லிங்கநகர் கோணலிங்க வித்தியாலயத்தில் கணனிக் கற்கை நிலையம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த சனிக்கிழமை (02.03.2013) அன்று காலை வித்தியாலய அதிபர் க.யோகானந்தன் தலைமையில் இடம்பெற்றது. (7ம் பக்கம்)

## இலங்கையில் இரு இனங்கள்தான். ஜனாதிபதி கூறியதாக அஷ்ஷெய்க் ஹஸன் மௌலான பேச்சு

நாட்டின் எல்லா மக்களையும் ஜனாதிபதி நேசிக்கிறார். இன்று சகல மதங்களையும், மக்களையும் விரும்பும் ஒரே மனிதன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் என ஜனாதிபதியின் முஸ்லிம் சமய விவகாரங்களுக்கான ஆலோசகர் ஹஸன் மௌலானா தெரிவித்துள்ளார்.

திருக்கோணமலை செய்யது மரைக்கார் மௌலானா சியாரத்தின் வருடாந்த கொடியேற்ற மற்றும் அன்னதான நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோதே ஹஸன் மௌலானா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இந்த நாட்டில் ஒன்று நாட்டை நேசிப்பவர்கள், நாட்டை நேசிக்காதவர்கள் என இரு இனங்களே உள்ளன என்றும் ஜனாதிபதி கூறுவதாக ஹஸன் மௌலானா குறிப்பிட்டிருந்தார்.

### – நானூறு ரூபாய் அறைகளில் –

## நாளொன்றுக்கு ஒரு பெண் பாலியல் வன்புணர்வு

நாளொன்றுக்கு ஒரு பெண் பாலியல் வன்புணர்வுக்குள்ளாவதாக மாத்தறைப் பிரதி மேயர் ரஞ்சித் ராசரத்ன தெரிவித்தார். இவர்கள் இருபது தொடக்கம் முப்பது வயதுடையவர்கள் என அண்மையில்.. (7ம் பக்கம்)

From March 18, 2013
Chartered Accountancy
Full Time Course
"To be the most sought after
Professional Qualification for Business Leaders"
CAB - I Time Table: 9:00 - 12:00
Monday Tuesday & Wednesday
Full Time
CAB - II Time Table: Saturday, Sunday & Poyaday
Part Time
Veal Business College. No 159A, Sea View Road, Trincomalee. 0777 555 738



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## வன்முறைகளை நோக்கி நகரும் சிறுவர்கள்!!!

அண்மையில் ஓர் அனுபவத்தை பெறமுடிந்தது நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் தனது கையை கத்திபோல் வைத்துக்கொண்டு தன்னுடன் விளையாடிய சிறுவர்கள் எல்லோரையும் வெட்டிவீழ்த்தும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தான். இரக்கம் வராத அந்த விளையாட்டுக்களின்போது ஏனைய குழந்தைகள் அழுவதையும் விழுவதையும் ஆழ்ந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

அந்த குழந்தையுடன் பேசக்கிடைத்தபோது தனது கையில் உள்ளது கத்திதான் என்று அவன் உறுதிபடத் தெரிவித்தான். அது யாருடைய கத்தி என வினவியபோது தான் பார்க்கும் கார்ட்டூனில் வரும் கதாநாயகனின் கத்திதான் அதுவென்று கூறியதுடன் அக்கத்தியாலேயேதான் மற்றக் குழந்தைகளை வெட்டி வீழ்த்தியதாகவும் கூறினான்.

இப்போதெல்லாம் சிறுவர் விரும்பிப் பார்க்கும் கார்ட்டூன் படங்களில் பெரும்பாலானவை ஆயுதந்தாங்கிய கதாநாயகர்களையும் அவன் நியாயத்தின் பெயரில் செய்யும் கொலைநிலையையும் வளர்த்து விடுகின்றன. அத்துடன் தமது ஆயுதங்களால் வெட்டி வீழ்த்தப்படும் ஏனையோரின் வலி அவர்களுக்கு ஆதங்கம் தரும் விடயமாகவும் கார்ட்டூன்களால் மாறிவருகின்றன.

அவர்கள் ஆயுதம் சார்ந்து பயணிப்பதை தவிர்க்கமுடியாது போல் உள்ளது.

"இன்னா செய்தாரே ஒருத்தர் அவர் நான நன்னயம் செய்துவிடல்" இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் இவ்வுலகில் குழந்தைகள் உட்புக இந்தக் கார்ட்டூன்களே வழி சமைக்கின்றன.

எனவே பெற்றோர்களே குழந்தைகள் எவ்வகையான கார்ட்டூன்களைப் பார்க்க வேண்டுமென்பதை நாமே வரையறுக்க வேண்டிய தேவையில் இன்றைய உலகு எம்மைத் தள்ளியிருக்கின்றது. குழந்தைகள் பார்க்கும் கார்ட்டூனை நாங்களே வரையறுப்போமா? -ஆசிரியர்-

☆

**அனைத்துலக பெண்கள் தின வாழ்த்துக்கள்**

## நீதிமன்றம் மீது திருப்தியில்லாவிடின் பிரதம நீதியரசருக்கு முறைப்பாடு செய்யவும்.



நீதிமன்றத்தின் செயற்பாடுகள் மீது திருப்தியில்லாவிட்டால் தபால் ஊடாக பிரதம நீதியரசருக்கு முறைப்பாடு செய்யவும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பொலன்னறுவை பக்கமுன பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் குறிப்பிட்டதாக தமிழ்வின் இணையத்தளம் 07.03.2013 வியாழனன்று செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இவ்வாறு அனுப்பிவைக்கப்படும் முறைப்பாடுகள் பற்றி எவரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் பிரதம நீதியரசர், கொழும்பு - 12 என்ற முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்கலாம் எனவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கின் முதல்வரோடு குழுவொன்று தென்கொரியா பயணமானது

கிழக்கு மாகாண முதல்வர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையிலான குழுவொன்று இரண்டு வாரகால உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு தொன்கொரியா பயணமாகியுள்ளது.

தென்கொரிய அரசின் அழைப்பின் பேரில் இப்பயணத்தை மேற்கொள்ளும் இக்குழு ஆசிய பவுண்டேஷன் மற்றும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்படும் வர்த்தக உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபடவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று வயது பாலகியை முட்டி எறிந்தது மோட்டார் சைக்கிள்

புல்மோட்டை வீதியின் இறக்கக்கண்டி - வாழையூற்று பிரதான வீதியை கடக்க முயன்ற மதியழகன் விதுசா என்ற மூன்று வயதுப் பாலகி மீது மோட்டார் சைக்கிளால் முட்டித்தள்ளிய நபர் சம்பவ இடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். குறித்த நபர் ஆறாம் கட்டை பகுதியை நோக்கிச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். பாலகி விதுசா ஆரம்ப சிகிச்சைகளை நிலாவெளி கிராமிய வைத்தியசாலையில் பெற்று மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொதுவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபரை தேடும் முயற்சியில் குச்சவெளி பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## முள்ளிப்பொத்தானையில் பொலிஸ் நடமாடும் சேவை

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு முள்ளிப்பொத்தானை சிங்கள மகா வித்தியாலயத்தில் 06.03.2013 அன்று நடமாடும் சேவையொன்று இடம்பெற்றது.

தம்பலகாமம் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் நடந்த இந்நடமாடும் சேவையில் தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.அபேரட்ண தலைமை வகித்ததோடு கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நீல் ஹெட்டியாராச்சி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ரோகான் தசாநாயக்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டிருந்தனர்.

## திருமலை மாவட்டத்திற்கு மூன்று மருத்துவ ஊர்திகள்

ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்தால் திருகோணமலை மாவட்டத்திற்கு மூன்று மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட 28.5 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியுள்ள இவ் வண்டிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெகத் அபேசிங்க செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை கிளையின் தலைவர் ஈ.ஜீ. ஞானகுணாலனிடம் கொழும்பில் கையளித்துள்ளார். இம்மூன்று வண்டிகளில் ஒன்று திருமலை பொதுவைத்திய சாலைக்கும் மற்றையது குமரக்கடவைக் கிராமிய வைத்தியசாலைக்கும் மற்றைய வண்டி பதவியதள வைத்தியசாலைக்கும் வமங்கப்படவுள்ளமை குறிப்பிடக்கக்கது.



**வருந்துகிறோம்!..**

*16.02.2013இல் பிரசுரிக்கப்பட்ட மலைமுரசு இயம் - 30 இல் ரிசானா தொடர்பான கட்டுரையில் "ஷரியா" சட்டம் "ரியா" சட்டமென குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு.*

## நெல் அறுவடை இயந்திரத்துள் சிக்குண்டு சிறுவன் பலி

ஹொரவப்பொத்தானை முக்கெறெவ கிராமத்தில் நெல் அறுவடை இயந்திரத்துள் சிங்குண்டு சிறுவன் பலியான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பதினைந்து வயதான ருஸ்கின் என்ற சிறுவனே அறுவடை இயந்திரத்தினருகிலிருந்தவாறு அதற்குள் வீழ்ந்து பலியாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான நீதவான்

திருக்கோணமலையில் வசித்துவரும் ஓய்வுநிலை அதிபர் கனகராசா மகேந்திரா அகில இலங்கை சமாதான நீதவானாக திருக்கோணமலை மாவட்ட நீதிபதி ஜே.ஜே. பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்துகொண்டார். ஆசிரியராக, அதிபராக கடமையாற்றியு இவர் கலை, இலக்கிய மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். இலக்கிய பணிகளுக்காக பிரதேச சாகித்ய விருதையும், மாகாண முதலைச்சர் விருதையும் கலாபூஷண விருதையும் பெற்று கௌரவிக்கப் பட்டவராவார்.



## "கோணநாதர் பவனி வருகிறார்"

அடி முடி தேட எம்மை
ஆட்டி வைத்த எம்பெருமான்
ஆன்மிக பெரியோர்கள் சொன்ன அற்புத
பக்தர்கள் குடைசூழ திருமலை மண்ணில்
கோணநாதப் பெருமான் பவனி வருகின்றார்:
மகா சிவன் ராத்திரி நன்நாளை ஒட்டி
பார்புகழ் பரமன் பார்வதியை இடமாக
அணியணியாய் திகழ் அலங்கார தோரனை
அருமருந்தாம் இவன் ஆலகால விடம்
அனைத்தையும் உண்ட கண்டனாய்
கைகளில் சிலம்பும் கால்களில் சதங்கையும்
நெற்றியில் நீறும் நிகழ்ஒளி பெட்டும்
வெட்ட வெளியில் வீற்றிருக்கும் சிவனாய்
முப்பத் மூன்றடி மூன்றடி முதுபெரும் கலைவளர
முகப்பு தோற்றமாய் முன்னின்று வரவேற்கும்
அற்புத கோலம் காட்டி அடியவர் அனைவருக்கும்
அருளையே அள்ளி வழங்கும் ஆனந்த தாண்டவ
ஐயனாய் காட்சி தந்து ஆனந்த கூத்தன்
அர்த்த நாரீஸ்வரனாய் அன்பை சொரியும்
கோமாதா மடியின்மேல் காட்சி தந்தருளும்
நெஞ்சினில் வஞ்சமில்லா மாந்தர் நிறை
குறைகள் எல்லாம் களைந்து ஓட்டும்
நன்னெறி கொண்டு நாளுமே தொழுது
நடைப்பிணங்களாக நடமாட முடியாதார்
முன்னேறிவந்து அவர் முறையீடு கேட்கும்
சென்னெறி கொண்ட சிவனாய் அடியவர்க்கு
குடிதனை நெருக்கமாய்
பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந்தார்
எண்ணங்கள் யாவையும் எண்ணியே இருப்பவர்க்கு
இன்பமே சொரிந்து ஏழ்மையைப் போக்கும்
பிள்ளைகள் தன்னை பெரும்போட்டி காண
மாங்கனி தன்மை மாதா முன்னிலைப் படுத்தி
உலகையே ஊர்வலம் வந்து
உமையார் அடிசேரமுன்
தந்தைதாய் சுற்றி மாங்கனியைப் பெறவைத்த
எல்லையில்லா இன்பமருளும் எம்மப்பனி
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழானர்
கோணமா மலையமர்ந்தார்
பவனிவருகின்றார் கோணநாதன்
மாதுமையம்மை மனம் கொள் ஐயன்
மகா சிவன் ராத்திரி நன் நாளையொட்டி
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவார் வானிடைப் பொலிந்தே
பவனிவருகின்றார் கோணநாதப் பெருமான்
பவனிவருகின்றார் பவனிவருகின்றார்:

*சீ.என். துரைராஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைக்கல்லும் தடுக்கி வீழ்தலும்!

*- தில்லைநாதன் பவித்ரன் -*

கடந்த பத்தியில் பிழைத்த தக்கனவும் இங்கு எவ்வகையில் இருந்தன என்பது தொடர்பாக விளங்கினோம். தொடர்ந்தும் அக்கட்டுரைக்கான விசனக்களை இவ்வாரமும் சீர்தூக்கிப் பார்க்கலாம். கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் திருக்கோண-மலையை சேர்ந்தவர்கள் வளவாளர்-களாக இணைத்துக் கொள்ளப்-படாமைக்கான காரணம் இங்குள்ள இலக்கிய நெஞ்சங்களின் கூதல் போக்கும், பெருமை பேசலுமே என நான் குறிப்பிட்டிருந்தமையை மூத்தோரிடையே பிரதேசவாதம் பற்றி குறிப்பிட்ட நான் மேற்கண்ட கருத்திலே முரண்பட்டு நிற்பதாக சொல்லும் மைக்கல் கொலின் குறித்த பந்தியை ஏன் பிரதேசவாதப் போக்கோடு அனுகினார்? அங்கு நான் மேவ வந்தது கலையிலக்கிய வாதிகளின் ஒற்றுமையீனமும், அவர்களிடையே இருந்த பெருமை பேசலுமே குறித்த விழாவிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளித்திருந்த-மையையும் எங்கள் பக்க பிழை-நிலையை ஏற்றுக்கொள்வதுமே அன்றி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த வளவாளர்கள் அவ்விழாவில் சேர்த்தமை பற்றிய விசனங்களை அல்ல (30-01-2013 மலைமுரசில் வெளிவந்த எனது கட்டுரையில் ஒன்பதாவது பந்தியின் இறுதி ஐந்து வரிகளில் மேற்சொன்ன கருத்துக்களின் மெய் புரிதலை அனுகலாம்).

அம்பாறையும், மட்டக்களப்பும் கிழக்கு மாகாணங்கள் என்பதை சொல்லித்தரும் கொலின் அவர்களுக்கு திருக்கோணமலையும் அவற்றுள் அடங்கும் என்பதை சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன் போலத் தெரிகின்றது. அடுத்து மூத்த இலக்கிய வாதிகளின் ஒற்றுமையீனத்தை கூட்டிக்காட்டு-வதையும், பொதுமைப்படுத்திய இலக்கிய அமைப்பு இல்லை என்ற குறை கூறல்களையும் விடுத்து நாம் என்ன செய்யலாம் என சிந்தித்து செயல்படும்போது அமைப்பு தானாக தோன்றும் என்பது தொடர்பில் எனக்கு இன்னுமொரு சந்தேகம் தோன்றுகிறது. இவ்வளவு காலமும் என் முன்னோர் ஏன் அத்தகையதொரு ஐக்கியப்பட்ட சிந்தனையை செய்யவில்லை? மேலும் திருமலை கலையிலக்கியத்துக்காக பூபாளம் பாடியதாக சொல்பவர்கள் ஆண்டுக்கணக்கில் பூபாளம் பாடிய அக்காலத்திலேயே இச்சிந்தனையின் செயல்வடிவத்தை முயற்சித்-திருக்கலாமே?

நிகழ்காலமொன்றின் பிழைத்தலுக்கும் எதிர்காலமொன்றின் நிச்சயமற்றலுக்கும், இறந்தகாலம்தான் பொறுப்புக்கூற வேண்டியது. இறந்த காலத்தின் தவறுகள் நிகழ்காலத்தை பாதிக்கும் என்பதும், எதிர்காலத்தை வீணடிக்கும் என்பதும் ஈழத்தினுடைய மாந்தர்களாய் வாழும் நாம் எக்காலத்திலும் உணர்ந்த வண்ணம்-தானே இருக்கின்றோம் அது அரசியலாய் இருக்கட்டும், போராட்டங்களாய் இருக்கட்டும் எமது முன் தலைமுறைகள் விடுகின்ற தவறுகள் எதிர்காலத்தலைமுறையின் கையில் அளவுக்கு மீறிய குவிதல்-களை எல்லாத் தளங்களிலுமே செய்து வருகின்றமை வேதனைக்குரியது. இதில் திருக்கோணமலையின் காலையிலக்கியமும் விதிவிலக்கல்ல. இந்த இடத்தில் கலீல் ஜிப்ரானின் சில வரிகளை நுகர்தல் பொருத்த-முடையதாய் இருக்கும்

**உங்களில் ஒருவர்**
**கீழே விழுகின்றார் என்றால்**
**தடைக்கல்லைக் குறித்து**
**தனக்குப்பின்னால்**
**வருபவர்களுக்கு**
**எச்சரிக்கும் விதமாகவே**
**விழுகின்றார்**
**அது மட்டுமல்ல**
**தனக்கு முன்னால் சென்றவர்கள்**
**தன்னைக் காட்டிலும் வேகமாய்**
**சென்றாலும்**
**குறித்த தடைக்கல்லை**
**அகற்றவில்லை**
**என்பதாலும் விழுகின்றார்**

என்பது போல தொடர்ச்சியான விழுதல்களுக்கு, பின்னால் வருபவர்கள் மட்டும் காரணமாய் அமைய மாட்டார்கள். அவர்களுக்கு முன்னால் சென்றவர்களும் அடுத்த தலைமுறையின் தடுக்கி வீழ்தலுக்குப் பொறுப்புடையவர்கள் ஆகின்றனர்.

இத்தகைய வரலாற்றுப் பிழையை எனக்குப்பின் வருகின்ற தலைமுறைக்கு நான் விட்டுவைக்கப் போவதில்லை. (எனக்கு முன்னால் சென்றவர்களைப் போல).

அதற்கான ஆரம்பக்கட்ட பணிகளையும் இயன்றவரை செய்து கொண்டுதான் இருக்கிறேன் என்ற உறுதிமொழியோடும் இயன்றவரை எனக்கு முன்னாள் சென்ற பூபாளம் பாடிகளுக்கு மேற்சொன்ன ஜிப்ரானின் வரிகள் புரியும் என்ற நம்பிக்கையும் அவ்வரிகளின் தார்மீகப் பொறுப்பை திருக்கோணமலையின் கலையிலக்கிய சமூகத்தினர் இனியாவது உணர்வார்கள் என்ற எண்ணத்துடனும்.

*"தக்கார் தகவிலரென்பது அவரவர்*
*எச்சத்தால் காணப்படும்"*

என்று கூறி மூன்று வாரமாக மலைமுரசில் பேசிய நான் இன்று என் ஆசுவாசப் பெருமூச்சை அடைந்து கொள்கிறேன்.

*இப்பகுதியில் வரும் கட்டுரைகள் கட்டுரையாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களே! அவை மலைமுரசின் கருத்துக்கள் அல்ல... பெரும்பாலும் தணிக்கைகளுக்கு உட்படாமலே இக்கட்டுரைகள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படுகின்றன. (ஆ.்.ர்)*

# மௌனத்தை உடைத்த - மகுடம் -

*ச. மணிசேகரன்*

மட்டக்களப்பில் நல்லதொரு சஞ்சிகை ஒன்று இல்லை என்ற நீண்ட கால மௌனத்தை கலைத்துக்கொண்டு மட்டக்களப்பு, கிழக்கு என்ற எல்லைகளையும் தாண்டி ஈழத்து சஞ்சிகை உலகுக்கு வளமூட்டும் வண்ணம் மகுடம் மூன்றாவது இதழ் வந்துள்ளது.

இரண்டு மொழிபெயர்ப்பு கவிதைகள் உட்பட பதினைந்து கவிதைகளும், மூன்று சிறுகதை-களுடனும், மூன்று நூல் மதிப்புரை-களுடனும், ஐந்து கட்டுரைகளையும், ஒரு நேர்காணலையும் தாங்கி அற்புதமாக வெளிவந்துள்ளது.

உண்மையில் ஒரு சிற்றிதழின் நோக்கம் ஆழமும், விரிவும், தேடலும் சிந்தனைக் கிளரலுக்கு வழிவிட்டு திறந்த கருத்தாடலுக்கும் வாதப்பிரதி-வாதங்களுக்கும் வழிசமைக்க வேண்டும். அது ஒற்றைப் பரிமாணத்தை விட்டு பல்பரிமாணங்களை கொண்டதாக காணப்படவேண்டும். புதிய சிந்தனை தளத்தை நோக்கி வாசகனைத் தள்ள வேண்டும். அதனை மகுடம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதினூடாக ஈழத்து சிற்றிதழ்களின் வரிசையில் தனக்கான தனித்துவமான ஓரிடத்தை பிடித்துவிட்டது என்பதே மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தாகம், வியூகம், களம், ஆகவே, அலை, தீர்த்தக்கரை, சரிநிகர், மூன்றாவது மனிதன் என்று காத்திரமான ஈழத்து சஞ்சிகை வரலாற்றில் நீண்ட இடைவெளி ஒன்று ஏற்பட்டு விட்டது. அதனை மறுகா, கலை முகம், நந்தலாலா என்று நிரப்ப பல சஞ்சிகைகள் முற்பட்டுக்கொண்டிருந்-தாலும் மகுடத்தின் வருகை பாரிய வெற்றியை தந்திருக்கிறது.

சஞ்சிகையின் உள்ளடக்கத்தை நோக்கும்போது இரு சிறுகதைத் தொகுப்புக்களினதும் ஒரு கவிதைத் தொகுப்பினதும் மதிப்புரைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்தின் மூத்த படைப்பாளி நந்தினி சேவியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான "நெல்லிமரப்பள்ளிக்கூடம்" சிறுகதைத் தொகுப்பிற்கான மதிப்புரையை முல்லை வீரக்குட்டி நயம்பட விபரித்து செல்கின்றார். அவ்வாறே யோ.கர்னனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான "சேகுவாரா இருந்த வீடு" நூலினை ம.பா. மகாலிங்க சிவம் விபரிக்கின்றார். இன்றைய நிலையில் முக்கியமான ஒரு தொகுப்பாகவும். அதேவேளை முக்கியமான ஒரு படைப்பாளியாகவும் அறியப்பட்ட யோ. கர்னனும் அவரின் படைப்பும் பலவிதங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. சமகால எட்டு ஈழக் கவிஞர்களின் கவிதைகளை "மரணத்தில் துளிர்க்கும் கனவு" எனும் தலைப்பில் தீபச்செல்வனால் தொகுக்கப்பட்ட நூலை சி. ரமேஷ் விபரிப்பு என்பதற்கு அப்பால் தனது முழுமையான விமர்சனத்தை முன்வைக்கின்றார். இவ்வகையில் நூல் மதிப்புரையில் இடம்பெற்ற மூன்று நூல்களும் மூவரினாலும் மூன்று விதமாக நோக்கப்படுவது சிறப்பானது. சூசை எட்வேட்டின் "துணிவே துணை", வே. தில்லைநாதனின் "வல்ல குருநாதன்", வி. மைக்கல் கொலினின் "யாருமிங்கே தீர்ப்பிடலாம்" ஆகிய மூன்று சிறுகதைகளில் "வல்ல குருநாதனும், யாருமிங்கே தீர்ப்பிடலாம்" ஆகியன குறிப்பிடத்தக்கன. இன்று தமிழ்ச்சிறுகதைகளின் எடுத்துரைப்பு முறையிலும் உருவ, உள்ளடக்க முறையிலும் பாரிய வளர்ச்சியையும் உச்சத்தையும் நோக்கி சென்றுகொண்டி-ருப்பதை சஞ்சிகை ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டும். அண்மைக்காலமாக மைக்கல் கொலின் தனது சிறுகதைகள் மூலம் மகாபாரதம், பைபிள் போன்ற முக்கிய நூல்களில் உள்ள சம்பவங்களி-னூடாக அல்லது தொன்மங்களினூடாக சமகால நிகழ்வை பேச முற்படுகின்றார். நல்ல முயற்சி, இங்குள்ள அவரின் சிறுகதையும் அவ்வாறானதே. கட்டுரை-களில் பிரித்தானிய அரும்பொருட்-காட்சியகத்தில் கண்ணாடிப் பெட்டிக்குள் மட்டக்களப்பின் கி.பி முதலாம் நூற்றாண்டின் வழக்கிலிருந்த நாணயம் பற்றி பேரா. மௌன குருவின் கட்டுரையும், மட்டக்களப்பின் பன்முகப்பண்பாட்டு ஓவியரான ஸ்ரீ கமலச் சந்திரன் பற்றிய சு. சிவரெத்தினத்தின் கட்டுரையும் மட்டக்களப்பு [illegible] கொண்ட கட்டுரை[illegible] அதேவேளை மு.பொ.வின் புது வடிவங்களை சூல் கொள்ளக் காத்திருக்கும் கலை இலக்கியப் பெருவெளி திசேராவின் புனைவுடன் புனையாத கோட்பாடும் கோட்பாட்டுப் புனைவும், அ.ச. பாய்வாவின் ஆதார நிலைகளில் மறுவினை ஆகிய கட்டுரைகள் மிக முக்கியமான கட்டுரைகளாகும். இவைகளைப் பற்றி ஒரு திறந்த கருத்தாடல்களையே நிகழ்த்தலாம். இவை பல விவாதங்களுக்கு வழிசமைக்கக் கூடிய கட்டுரைகளாகும். பாய்வா முன்வைக்கும் மறு வினைகள் பற்றி பலவித கேள்விகள் பலரிடமும் இப்போதே எழத்தொடங்கி விட்டன. ஆனால் அவைகளை எழுத்து வடிவில் கொண்டுவருவதனால் மட்டுமே வாதப் பிரதி வாதங்களுக்கும், சிந்தனைத் தெளிவிற்கும் வழிவகுக்கும். எமது பண்டைய இலக்கியங்கள் பற்றியும், எமது மொழியின் கருத்து நிலை பற்றியும், சிறுகதை வடிவங்கள் பற்றியும் விமர்சனங்கள் விமர்சகர்கள் பற்றியும் எழுப்பப்படும் கேள்விகள் ஆச்சரியமானவை என்றால் அதற்குப் பதில் அளிக்கப்படவேண்டியவையே!

இன்று பலரையும் உசுப்பி விட்டிருப்பது ராகவனின் நேர்காணல் ஆகும். நீண்ட நேர்கணல் முதற்பகுதி இரண்டாம் இதழில் வெளிவந்து இறுதிப் பகுதி இவ்விதழில் இடம்பிடித்துள்ளது. உலக சிற்றிதழ்களில் இதுவரை வெளிவராத மிக நீண்ட நேர்காணல் என்ற குறிப்பும் இடம்பிடித்துள்ளது. நேர்காணல் என்றவுடன் சுபமங்களாதான் நினைவுக்கு வருவது உண்டு. எனினும் ஞானம், காலச்சுவடு போன்ற சஞ்சிகைகளில் பூரணமான நேர்காணல்கள் இடம்பெறுவதுண்டு. தற்போது நேர்காணலுக்கென்றே சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. இவ்வகையில் ஒரு பூரணமான நிறைவான நேர்காணல் இதுவெனலாம்.

ராகவனின் சிறுகதைகளைப் போலவே இவரின் நேர்காணலும் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இங்கே பல படைப்பாளிகள் விமர்சனத்துக்கு உள்ளாவதன் காரணமாக பல எதிர்வினைகளுக்கு [illegible] வண்ணம் அமைந்துள்ளது. நேர்காணலை வழங்கியவரை விட அதனை வெளியிட்ட சஞ்சிகை ஆசிரியரின் துணிவு பாராட்டத்தக்கது.



"மட்டக்களப்பில் வைத்து, சித்தாண்டி கண்ணீர்" ஆகிய இரு கவிதைகளை மஞ்சுள வெடிவர்த்தனா என்ற சிங்களக் கவிஞர் எமக்காக அவர்களின் அல்லது நீதியின் குரலாக படைக்க அதனைத் தமிழில் ஃபஹிமா ஜகான் தந்துள்ளார். எம். ரிஷான் ஷெரிப்பின் "துயர் விழுங்கி பறத்தல், காலத்தின் கொலைகாரன்", அவ்வாறே வாசு தேவனின் "புதிய வீதியில் போதலும் வருதலும்", ஜபாரின் "மிகைக்களிப்பின் மரணம், சவாரிகள் மீளவும் மீளவும், வீழ்வு எழுவு மற்றும்", சமரபாகு உதயகுமாரின் "நந்திக் கடல் மீன் குஞ்சுகள்", கோ. நாதனின் "போரின் அபந்த ஓசை", பாலமுருகனின் "பயங்கரமானதொரு அமைதி", புலோலியூர் வேல் நந்தனின் "மேய்ப்பனை இழந்த வெளி" போன்ற கவிதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கவிதைகள் பலவும் சமகாலத்தை நாசூக்காக பேச முற்படுகின்ற பதிவுகளாகும். முக்கியத்துவம் வாய்ந்த கவிதை-களுமாகும். இக்கவிதைகள் பற்றி விரிவாகப் பேச வேண்டும். இவ்வாறே மூன்று கட்டுரைகள் பற்றியும் நேர்காணல் பற்றியும் பேச வேண்டும். அவ்வாறாயின் இது சஞ்சிகை பற்றிய அறிமுகக் குறிப்பு என்ற எல்லையை தாண்டிவிடும் எனும் வகையில் வாசகனுக்கு விடுத்து.

நிறைவானதொரு சஞ்சிகை நீண்டகாலம் நிலைக்க வேண்டும். அதே வேளை நல்ல வாசகனை சென்றடைய வேண்டும். மேலும் பலம் பெற வேண்டும். நவீன இலக்கிய தேடல் உள்ள அனைத்து இலக்கிய வாதிகளும் கட்டாயம் வாசிக்க வேண்டிய ஈழத்தின் மிக முக்கியமான இதழ் மகுடம்.

*மகுடத்துடனான தொடர்புகளுக்கு*

ஆசிரியர் - மகுடம் - 90,
பார் வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாலிபன் அருகில் வந்து என்ன இன்றைக்குப் பாடவில்லையா? என்று கேட்கும் வரை அவள் திரும்பவில்லை.
அவள் புன்னகைத்தாள்.
நான் உங்கள் ரசிகன்..... நம்புங்கள்
அவள் சிரித்தாள்.
ஏன்? சிரிக்கிறீர்கள்
ஒரு நாள் ரசிகனா?
ஏன் இனி நீங்கள் பாடமாட்டீர்களா?
மனம் சொன்னால் பாடுவேன்
நான் சொன்னால் பாடமாட்டீர்களாக்கும்
முன் பின் தெரியாதவர் சொல்லப்பாடுவது எங்கள் ஊர்பழக்கமில்லை
அப்பா! பெரிய பழக்கம்தான்
இப்படியாக அந்த வாழைத்தோட்டம் அவர்களது சந்திப்புக்கான தளமாக அமைந்துவிட்டது. நாளாக ஆக ரங்கநாயகியின் மனதில் இருந்த அச்சமும் தயக்கமும் அகன்று விட்டது. அவன் தனக்கொரு பாதுகாவலன் என்பதாக உணரத் தலைப்பட்டாள்.

அவன் அருகில் வந்து பாடச்சொல்லிக் கெஞ்சுவான். அப்படிக் கெஞ்ச வைப்பதில் அவளுக்கொரு ஆனந்தம். அவனது உயர்வான பண்புகளும், நல்ல நடத்தைகளும் அவளை அவன் நம்பத்தகுந்தவன் என்று எண்ணவைத்தன. அவன் வரத் தாமதமாகிவிட்டாலோ என்னவோ? ஏதோ? வென்ற பதைப்பு எழுந்து, என்ன காரணம்? என்று தேடிக் குழம்பியது அவள் உள்ளம்.

அவனும் அவள், தான் கேட்டுக் கொண்டபோது பாடாதது கண்டு சினக்கவில்லை. அவளை விளங்கிக் கொண்டான்.

அந்நியனான நான் அப்படிக்கேட்டதே தவறு என்று சமாதானம் சொல்லிக் கொண்டான். இந்த நிலை கொஞ்ச நாட்களுக்குத்தான் நீடித்தது. இப்போதெல்லாம் அவள் அவனை ஏமாற்றவும், சீண்டவும் விரும்பவில்லை. இசைமீது அவனுக்கிருந்த ஆவலை அவன் சொல்லிக்கேட்டு ஏற்றுக்கொண்டு பாடலானாள். அவனும் அவளது இராக ஆலாபனைகளை எத்தனையோ ஆகாக்கள் போட்டு ரசிக்கலானான்.

ஒரு நாள் அவனே சொன்னான். நான் தம்பன் கோட்டை வீரர்களில் ஒருவன். பெயர் குமரன். என்னைக் கண்டு அஞ்சத்தேவையில்லை.நான் ஊருக்குப் புதியவன்தான் என்று அவள் கேளாமலே தன்னை வெளிப்படுத்தத் தொடங்கினான்.

முதல் நாள் ஊகம் ஊர்ஜிதமானது. தன் கணிப்பு சரியாக அமைந்தது அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. இருந்தாலும் அவன் தோரணை எல்லாம் அவன் சாதாரண வீரனல்ல என்ற எச்சரிக்கை உணர்வை அவளுக்கு கொடுக்காமலில்லை. அப்படித் தான் இருந்தாலும் அவ்வாறான ஒருவன் தன்னோடு சமனாகப் பழகி, பேசி, ஏன்? பாடச் சொல்லிக்கேட்டு ... ஒரு பக்கம் எண்ணும்போது பெருமையாகவும் இருந்தது. வேடிக்கை என்னவென்றால் இதுநாள் வரையிலும் அவன் அவள் பெயரைக் கேட்டதேயில்லை.

தம்பன் கோட்டை வரலாறும் சுவாரசியமானது. அறியப்பட வேண்டியது.

கலிங்கத்து விஜயபாகு (மாகன்) கி.பி.1215 இல் இலங்கை மீது படையெடுத்து பொலன்னறுவையைக் கைப்பற்றி கி.பி. 1236 வரையிலும் இலங்கையை ஆட்சிசெய்தான் என்று சரித்திரம் கூறுகிறது. இலங்கையை ஆண்ட கலிங்க மன்னர்கள், இங்குள்ள பௌத்தர்களைத் திருப்திப்படுத்தி ஆட்சியில் நீடிக்க பௌத்த மதத்தைத் தழுவி பௌத்த மன்னர்களாகவே ஆட்சி செய்தனர்.

ஆனால் கலிங்க விஜயவாகு, கலிங்க மாகன் என்றெல்லாம் பெயர்கொண்ட இம்மன்னனிடமோ வலிமை மிக்க தமிழ், மலையாள வீரர்கள் அதிகமாக இருந்ததால் தன்னை எதிர்த்தவர்களைத் தன் போர் வலிமையால் அடக்கி மதம் மாறாமல் இந்து மன்னனாகவே ஆட்சியில் இருந்தான்.

இலங்கை முழுவதும் உள்ள பௌத்தர்கள் இவனது ஆட்சிக்கு எதிர்ப்பாக இருந்து, அடிக்கடி தொல்லை கொடுத்து வந்துள்ளனர். தமக்கு எதிராக நாட்டில் எந்த மூலையிலாவது கிளர்ச்சி தோன்றினால் அதை முறியடிக்க வசதியாக பொலநறுவை, புலச்சேரி, சதுர்வேதமங்கலம், (தற்போதைய கந்தளாய்) கந்துப்புலு, குருந்து, பதவியா, மாட்டுக் கோணா, தமிழ்ப்பட்டணம் (தற்போதைய தம்பலகாமம்) ஊரார்த்தொட்டை, கோமுது, மீபாத்தொட்டை, மன்னார், மண்டலி, கொட்டியாபுரம் என்று நாட்டின் பல பகுதிகளிலும் தேவைக்கு அளவான கோட்டைகளை நிறுவி படைகளையும் தகுந்தாற்போற் நிறுத்தியிருந்தான் என்பதை சரித்திர நூல்கள் நிரூபிக்கின்றன.

தம்பலகாமத்தில் வேறு இனங்களின் கலப்பின்றி தமிழர்கள் மட்டுமே வாழ்ந்ததால் அதற்கு தமிழ்ப்பட்டணம், தம்பைநகர் என்ற பெயர்கள் வழங்கி வந்ததாக அறியமுடிகின்றது. கி.மு.543ல் இலங்கை வந்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற முதல் ஆரியமன்னரான விஜயன், இந்த தம்பலகாமம் ஊரில்தான் சிவன் ஆலயத்தை அமைத்தான் (என்று செ.இராஜநாயக முதலியார் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது).

இந்த ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வெண்பில் கலிங்க விஜயவாகு கிழக்குப் பகுதிகளினின்றும் வரக்கூடிய எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்கக் கோட்டையொன்றை அமைத்து, தம்பன் என்ற தளபதியின் கீழ் பெரும் படையொன்றை நிறுத்தியிருந்தான். இந்த தளபதி தம்பன் வீரசாகசங்களுக்குப் பேர் போனவர்.

தனது பொறுப்பிலிருந்து கோட்டைமீது இலங்கையின் கிழக்குப் பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அவர் தம்பன் கோட்டைப் பிரதேசத்திலேயே போரிட்டு முறியடித்தது மில்லாமல், இனிமேலும் அவர்கள், எந்தத் தாக்குதலுக்கும் முயலக்கூடாத வகையில் அவர்களை அடக்கிப்போடவேண்டும் என்ற முனைப்பில் அவர்களைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று இறுதிப் போரிட்டு முடக்கிப் போட்டார். அப்படி முடக்கிப்போட்ட இடம்தான் பொலநறுவை மட்டக்களப்பு பாதையில் அமைந்துள்ள தம்பன்கடுவை என்று அழைக்கப்படும் தம்பன் கடவை என்ற இடமாகும்.

தொடரும்...

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 6

## வரலாற்று நாவல்

> **சென்ற வாரம்...**
> **தனது அவசரம் குறித்துத் தன்னைக்கடிந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவளாகத் திரும்பி ஆற்றை நோக்கினாள்.**




# திருகோணமலையில் சோழர்களால் ஏற்பட்ட மாற்றங்கள்...

இன்றுவரை உலகின் சிறந்த ஆக்கிரமிப்புத்தந்திரம் அவர்கள் நாட்டில் அவர்கள் நம்பிக்கைகளை தொடவதற்கு ஆதரவளித்து அவ் நம்பிக்கைகளுக்குள் பிளவை உருவாக்கி உள்ளூர் வளங்களை சுரண்டுவது

சோழர்கள் ஆக்கிரமிப்பின் முதல் படியாக சுங்க சாவடி ஒன்று கொட்டியார வன்னிமை பகுதியில் ''மடிகை'' என்ற பெயரில் உருவாக்கினார்கள். அதன் பிறகு திருமலை பகுதியில் இருந்த வன்னிமைகளின் நிர்வாகத்தை படிப்படியாக உடைத்து நிலவாடகை, மற்றும் வயல் வருமானங்களுக்கான வரியினை விதித்தனர்.

அதன் பிறகு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு போர் தாக்குதலை சமாளிக்க வன்னிமைகளின் படைப்பிரிவுகள் மற்றும் சோழ நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட படை வீரர்களை இணைத்து வேலைக்காறாப் படை என்ற படைப்பிரிவை உருவாக்கினர்.இது உறங்கு நிலை படைப்பிரிவாக இருந்தது கொண்டு ஆபத்து காலங்களில் மட்டும் செயற்படும் படையாக உருவாக்கினர். ஆனால் இந்த படையே இவர்களுக்கு ஆபத்தை கொண்டு வந்தது.

வரி விதிப்புகளையும் சோழர் சட்டங்களை தாங்க முடியாத உள்ளூர் வாசிகளான வேலைக்காறாப் படையினர் கிளர்ச்சி மேற்கொள்ள முனையவே. சோழர்களோ மிக



லாவகமாக சாதிய முறையை திருமலை சமூகத்திடம் புகுத்தினர். பத்தாம் நூற்றாண்டு வரை தொழில்களாக இருந்தவை சாதிகளாக மாற்றப்பட்டன. இச் சாதிகளை கட்டுபடுத்தும் சாதியாக பார்ப்பனீயம் (பிராமணம்) சோழ நாட்டில் இருந்து இலவசமாக இறக்குமதி செய்யப்பட்டது. கந்தளாய் பகுதியில் சதுர்வேதிபிரமபுரம் என்ற பெயரில் பிராமண குடியிருப்பு அமைக்கப்பட்டதுடன். உள்ளூர் தமிழர்களுக்கென பதவியாவில் ஐம்பொழில் என்ற சைவ ஆலயமும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு தங்களுடைய அபகரிப்புகளுக்காக மதத்தையும் சாதியையும் பயன்படுத்தி கொண்ட சோழர்கள்.. திருமலையில் விட்டுச் சென்ற தடையங்களை சில வரலாற்று ஆய்வாளர் மற்றும் வைத்தியர் திரு. த. ஜீவராஜ் அவர்கள் தனது வலைப்பூவில் ஆவணப்படுத்தி [illegible] பின்வருமாறு...

கந்தளாய், திருகோணமலையில் இருந்து கண்டி செல்லும் பாதையில் நாற்பது கிலோமீற்றரில் அமைந்திருக்கும் ஊர். இலங்கையின் மிகப்பெரிய விவசாய நிலங்களைக் கொண்ட பிரதேசங்களில் ஒன்றாகக் கந்தளாயும் கருதப்படுகிறது. பண்டைய நாட்களில் கந்தளாயில் "சதுர்வேதி மங்கலம்" என்றழைக்கப்பட்ட பிரதேசம் இருந்தது. இங்கு நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த அந்தணர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு இப்பிரதேசம் வரியில்லாமல் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்த குடியேற்றம் அளவில் பெரிதானதாகவும், அதிகாரம் கொண்டதாகவும் அமைந்திருந்தது என அறியமுடிகிறது.

கி.பி 1010 ஆம் ஆண்டில் இங்கு இராசேந்திர சோழனால் சிவன் கோவில் கட்டப்பட்டது. அப்புராதானக் கோயிலின் சிதைந்த பாகங்களைக்கொண்ட சிவன் பார்வதி சிலை, தூண் சிதைவுகள் , ஆவுடையார் போன்றவை இன்றும் அக்கோயிலின் வரலாற்றுத் தொன்மைதனை பறைசாற்றி நிற்கிறது. வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் இங்கிருந்த ஆலயம் பிரசித்தமானதாகவும், பலர் ஒன்றுகூடி அமர்ந்து கலந்துரையாடக்கூடிய மண்டபங்களைக்கொண்ட பிரமாண்டமானதாகவும் இருந்திருக்கவேண்டுமென அறியமுடிகிறது. கந்தளாயிலுள்ள பேராறு எனுமிடத்தில் அமைந்திருக்கும் இவ்வாலயச் சிதைவுகள் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் அவ்விடத்தில் அமைக்கப்பட்ட சிவனாலயத்தையே மேலுள்ள படத்தில் காண்கிறீர்கள். இவ்வாலயச் சூழலில் கண்டெடுக்கப்பட்ட பல சாசனங்களில் இருந்து இவ்வாலயத்தின் சிறப்பையும் இங்குவாழ்ந்த மக்களது சமய, பண்பாட்டு நடைமுறைகளையும், இப்பிரதேசத்தில் நிலவிய அரசாட்சி பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது.



அங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சொல்லும் செய்திகளின் சுருக்கம்.

**01.** இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தின் ஊராட்சி அமைப்பான பெருங்குறி (மகாசபை) பெருமக்கள் ஒரு இரவு ஒன்றுகூடி விக்கிரம சோழ வாய்க்கால் தொடர்பாக எடுத்த தீர்மானத்தின் பதிவுகளையே ஒரு கல்வெட்டு சொல்கிறது.இதனை ஆராய்ந்த கலாநிதி.கா.இந்திரபாலாவின் கருத்துப்படி கி.பி 1033 மாசி 13ம் திகதி கி.பி 1047 மாசி 10 ம் திகதி இம் மகாசபைக்கூட்டம் நிகழ்ந்திருக்கவேண்டுமெனக் கருதுகிறார்.

**02.** இங்குள்ள இன்னுமொரு சாசனம் முதலாம் விஜயபாகு தேவரின் 42 ம் ஆட்சியாண்டிலே எழுதப்பட்டது.(கி.பி 1097) நங்கைசானி என்னும் பிராமணப்பெண் தனது கணவனின் நினைவாக சதுர்வேத மங்கலத்து விஜயராஜ ஈஸ்வரம் என்னும் ஆலயத்தில் ஏற்படுத்திய அறக்கட்டளை பற்றிய விவரங்களை அது வர்ணிக்கிறது.

(இன்னும் நடுவோம்)

கா. செந்தூரன்


**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரபின் உலக வலம்

## சீன அதிகாரக் கையளிப்பு சுமூகமாக நிறைவேறியது.

சீன தேசிய காங்கிரஸின் கூட்டத்தின் முடிவில் சீனாவின் முன்னாள் ஜனாதிபதி ஹூ ஜின்தாவோவிடமிருந்து அந்நாட்டின் புதிய ஜனாதிபதி சீ ஜின் பிங் ஜனாதிபதி அதிகாரங்களை பெற்றுக்கொண்டுள்ளார். சீன தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் கூடிய அக்காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்கள் அனைவரும் தாம் ஊழலுக்கு எதிராக போரிடுவதாக உறுதியெடுத்துக்கொண்டனர். அத்துடன் சுற்றுச்சூழல் விடயங்களில் மேலதிக கவனத்தைச் செலுத்துவதுடன் சீன இராணுவத்தை மேலும் பலப்படுத்தும் உறுதி மொழியையும் அவர்கள் அனைவரும் மேற்கொண்டனர். இக்கூட்டத்தில் பதவியை விட்டு அகன்று செல்லும் சீன பிரதமர் வென் ஜியா போ கருத்துத் தெரிவிக்கையில் கடந்த வருடங்களில் உலக நாடுகள் பல பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போதிலும் சீனா அந்நெருக்கடியிலிருந்து தன்னை முழுமையாகப் பாதுகாத்துக் கொண்டது என்று கூறினார். அத்துடன் கடந்த வருடத்தில் மட்டும் தாங்கள் 7.8 வீத மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பை பதிவு செய்திருந்ததுடன் 16 மில்லியன் புதிய வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.



## ஈராக்கிய எல்லைக்குள் சிரிய துருப்பினர் பலர் பதுங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான எல்லையின் ஊடாக ஈராக்கிற்குள் நுழைய முயன்ற ஆயுதமற்ற சிரிய துருப்பினரை தாங்கி வந்த வண்டியின் மீது ஆயுதம் தாங்கிய சிரிய நாட்டவர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 48 ஆயுதம் தாங்காத சிரிய படையினரும் 7 தொடக்கம் 9 ஈராக்கியர்களும் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவின் அரச அதிபருக்கு ஆதரவான படையினருக்கும் சிரிய விடுதலைப் படையினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்று வரும் இவ்வேளையில் சிரியாவிலிருந்து ஈராக்கிற்குள் புகும் அராபியா எல்லை பகுதியில் வைத்து நடந்த கடும் துப்பாக்கிச் சமரில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஈராக்கிய எல்லைப் பாதுகாப்புப் படையின் தளபதி லெப்டினன் கேணல் மொஹமட் காலிப் தெரிவித்துள்ளார். ஈராக்கிய எல்லைகளில் நிகழும் இவ்வகைத் தாக்குதல்களினால் ஈராக்கின் உட்பகுதிக்குள்ளும் சிரிய யுத்தத்தை எடுத்துவர பலர் முனைவதாகவும் அதனை தம்மிடமுள்ள அனைத்து வளங்களையும் வசதிகளையும் கொண்டு தடுத்து நிறுத்தப் போவதாகவும் ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சின் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளை மனிதர்களை காக்க துப்பாக்கிகள் அவசியம் – தென்ஆபிரிக்காவின் ஓட்ட வீரரின் தந்தை வாக்குமூலம்

தென்னாபிரிக்காவில் தனது காதலியை சுட்டுக் கொன்றதாக கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஒஸ்கார் பிஸ்தீரியஸ் ஓட்டவீரரின் தந்தை



தென்னாபிரிக்காவில் வெள்ளையின மக்களை காப்பதற்காக அவர்கள் அனைவரும் ஆயுதம் தாங்கியிருக்க வேண்டும் எனும் கருத்தை வெளியிட்டிருந்தார். தென்னாபிரிக்க அரசானது வெள்ளையின மக்களைக் காப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என குற்றஞ் சாட்டியுள்ள அவர் தமது தற்பாதுகாப்புக்காக தென்னாபிரிக்க வெள்ளையின மக்கள் அனைவரும் ஆயுதம் தரித்தவர்களாக இருக்க வேண்டும் எனும் கருத்தை டெலிகிராம் செய்தித்தாளுக்கு வெளியிட்டிருந்தார்.

## பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகளின் மீது மலேசியப் படையினர் தாக்குதல்

தமக்குத் தாமே றோயல் சூழு ஆமி என பெயர் சூட்டிக்கொண்ட சுமார் 180 பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகளின் மீது மலேசியப் படையினர் தமது தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். இந்த றோயல் சூழு ஆமி என்ற பிலிப்பைன்ஸ் ஆயுததாரிகள் மலேசியாவின் கடற்கரைப்பிரதேசமான சாவா பிரதேசத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 9ம் திகதி பிலிப்பைன்ஸிலிருந்து வந்திறங்கியுள்ளனர். இவர்கள் ஆயுதங்களை வைத்திருப்பதுடன் தாம் வந்திறங்கிய பிரதேசம் தமக்குரியதென உரிமை கோரியும் உள்ளனர். அவ்வாறு உரிமை கோருவதற்கு அவர்களிடம் 1800ம் ஆண்டிலிருந்தான நில உறுதிப் பத்திரங்கள் காணப்படுகின்றன. அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்போவதாக அண்மையில் மலேசிய அரசு அறிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் நிகழ்ந்த வன்முறைகளின் போது 27 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இதன் பின்னர் மலேசியா தனது தாக்குதல் விமானங்களிலிருந்து தாக்குதலை ஆரம்பித்து 30 நிமிடங்களின் பின் நூற்றுக்கும் மேற்பட்ட மலேசியத் தரைப்படையினர் இந்த சாவா பிரதேசத்தை நோக்கி நகரந்துவந்தனர். மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் தேர்தல் நடைபெறவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு சூழ்நிலை எழுந்துள்ளமையானது அங்கு ஆட்சியிலிருக்[illegible] பெருந்தலையிடி[illegible]

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 07

பிரதீபா

1. கிராமப்புறங்களில் மக்களுக்கு அடிக்கடி செங்கண்மாரி நோய் பரவியது. இந்நோய் பரவுவதற்கு முக்கிய காரணம் யாது?
   1. கிராமப்புறங்களில் வைத்தியசாலை இல்லாமை
   2. நீரைக் கொதிக்க வைத்து பருகும் பழக்கம் இல்லாமை
   3. கிராம மக்களுக்கு கல்வியறிவு குறைவு

2. "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" என்பதன் பொருள்?
   1. சூடு அதிகமுள்ள இடங்களை பூனை விரும்புவதில்லை
   2. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்
   3. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்

3. தேவியின் ஒரே மகளாகிய நிஷா, அக்காவுடன் கோயிலுக்கு சென்றமையால், பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறினாள். இது உண்மையாக இருப்பதற்கான காரணம்?
   1. நிஷாவுக்கு கோயிலுக்கு செல்ல விருப்பம்
   2. நிஷாவுக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லை
   3. நிஷாவின் பெரியம்மாவின் மகளும் ஒரே வீட்டில் வசித்தாள்.

4. "அற்பமான பொருளானது சிலவேளை பயன் தரும்" என்ற கருத்தை தரும் பழமொழி எது?
   1. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
   2. விளையும் பயிரை முளையில் தெரியும்
   3. சிறு துரும்பும் பற்குத்த உதவும்

5. கீழ் உள்ள தாவரங்களில் தண்டில் காய்க்கும் தாவரம் எது?
   1. கொய்யா  2. விளிம்பி  3. வேம்பு

6. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் இடம்? 1. ஜனகலாகேத்திரம்  2. சலுசல  3. ஒசுசல

7. கீழ் உள்ள பூக்களில் நறுமணம் வீசுவது எது?
   1. காட்டு மல்லிகை  2. வாடாமல்லிகை  3. மல்லிகை

8. கீழ் உள்ள மாவட்டங்களில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் எது?
   1. கொழும்பு  2. கண்டி  3. யாழ்ப்பாணம்

9. எதிரியிடம் இருந்து பாதுகாக்க உடலை வட்டமாக சுருட்டிக் கொள்வது?
   1. ஆமடில்ல  2. மர அட்டை  3. அட்டை

10. பல்வலி ஏற்படும் போது பல்வலியைக் குறைக்க கிராமப் புறங்களில் கைமருந்தாகப் பய்ன்படுத்தப்படும் தாவரம்?
    1. கற்றாளை  2. வேம்பு  3. ஆல்

11. வனைதல் சக்சரம் பயன்படுத்தப்படும் தொழில் எது?
    1. உழவுத்தொழில்  2. சுரங்கத் தொழில்  3. மட்பாண்டத்தொழில்

12. கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது?
    1. நீள்மூஞ்சி வண்டு  2. லேடிபேட் வண்டு  3. மீலி மூட்டுப் பூச்சி

13. இராட்சதப் புல் என அழைக்கப்படும் தாவரம் எது?
    1. கோரை  2. கடுபுல்  3. மூங்கில்

**கீழுள்ள தகவல்களைக் கொண்டு 15, 16 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

சீனி 250கி - ரூபா 28    துணி 1மீ - ரூபா 80
கோதுமை மா 500 கி - ரூபா 32    வர்ண நாடா 1மீ - ரூபா 108

14. 1.25கிலோ கிராம் சீனியினதும், 750 சென்ரிமீற்றர் துணியினதும் மொத்த விலை யாது?
    1. ரூபா 312  2. ரூபா 740  3. ரூபா 200

15. 50செ.மீ நீளமான துணிக்கு 1.5மீ வர்ண நாடா தேவைப்படின், 3.25மீ துணிக்குத் தேவையான வர்ண நாடாவை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?
    1. 9.75  2. 1053  3. 526.50

16. ரேகா என்பவள் ரூ 2 முத்திரைகளையும் ரூ 3 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினாள். இம்முத்திரைகளின் மொத்தப் பெறுமானம் ரூபா 100 எனின், அவள் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை?
    1. 40  2. 30  3. 50

17. 40 வினாக்கள் உள்ள வினாத்தாளில் ஒரு வினாவிற்கு சரியான விடையளித்தாள் 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையான விடை ஒன்றிற்கு 1 புள்ளி குறைக்கப்படும். 40 வினாக்களிற்கும் விடையளித்த குமார் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளி 35 ஆகும். அவரின் சரியான விடைகள் எத்தனை?
    1. 35  2. 20  3. 25

18. முதலாந் திகதி புதன் கிழமை நடைபெறவிருந்த மரநடுகை விழா தவிர்க்க முடியாத காரணத்தால் 15ம் திகதி நடைபெறும் என உரிய அதிகாரியால் அறிவித்தல் விடுக்கப்பட்டது. மரநடுகை விழா நடைபெறவிருக்கும் நாள் எது?
    1. புதன்கிழமை  2. செவ்வாய்க்கிழமை  3. வியாழக்கிழமை

29. கடிகார முகத்தில் கூர்ங்கோணத்தைக் காட்டும் நேரம்?
    1. 9.00  2. 5.00  3. 2.00

பெயர்: ...............................................................
...............................................................
முகவரி: ...............................................................
...............................................................
...............................................................
பாடசாலை: ...............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, [illegible] வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் மேலெழும் ஈழ மனித உரிமைகள்

## மார்ச் 2012 இலிருந்து மார்ச் 2013 நோக்கி...

கடந்த வாரம் ஜெனீவாவின் முன்மொழிவுகள் இலங்கை மீது திணிக்கப்பட்டால் இலங்கை இரண்டு விடயங்களை எதிர்கொள்ள நேரிடும் எனப் பார்த்தோம். அவை முறையே உண்மையை அறியும் சர்வதேசக் குழுவொன்றினால் உண்மைகளை அறிவதற்காக உருவாக்கப்படும் பொறிமுறையொன்றை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதுடன் அக் குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ள தடயவியல் மற்றும் குற்றவியல் தொடர்பான சுதந்திர விசாரணைக் குழுவுக்கு இணங்கியொழுகுதல் என்பவையாகும்.

இவ்விரு விடயங்களும் நிகழுமானால் இறுதியாக உண்மையான குற்றவாளிகள் மீது குற்றக் கயிறு இறுகும் என்பது வெளிப்படையானது. இதனால் எவ்வித வடிவத்தில் இலங்கையின் மீது இவ்விடயங்கள் திணிக்கப்பட்டாலும் அவற்றை வெளித்துப்பவே இலங்கை அரசு தயாராக இருக்கும்.

எனவே ஜெனீவாவின் மனிதவுரிமைச் சபையில் முன்மொழியப் பட்டுள்ள எட்டுப் பரிந்துரைகளும் அவை இலங்கை அரசால் பின்பற்றப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்படவுள்ள தீர்மானமும் வெறும் காகிதங்களுடனேயே முடிந்து விடுமா என்னும் சிந்தனை எமக்கு வருகின்றது அல்லவா?

உண்மையில் இப் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏற்றுக் கொண்டால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் சில காலங்களை இலங்கை அரசு பெற்றுக்கொள்ள முடியும். அக் கால எல்லை வரை எவ்விதமான நடவடிக்கைகளையும் இலங்கையின் மீது சர்வதேசச் சமூகம் எடுக்கப்பபோவதில்லை. ஏனெனில் இப் பரிந்துரைகளின் படி சர்வதேசச் சமூகத்தின் கண்காளிப்பாளர்களே இந்நாட்டில் நிலைகொண்டு முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய வுள்ளனர். இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் சர்வதேசச் சமூகம் இலங்கையை ஒரு வழிக்குள் கொண்டுவர விரும்புகின்றதே யொழிய இலங்கையை நேரடியாகத் தண்டனைக்குட்படுத்த விரும்பவில்லை. எனவே இலங்கை ஏதாவது ஒரு வழியில் சர்வதேசச் சமூகத்தின் வேண்டுகோளுக்கு ஒத்துழைக்கும் ஆயின் உடனடியாகவே இலங்கையின் மீதான சர்வதேசச் சமூகத்தின் அணுகுமுறைகள் மாற்றமடையத் தொடங்கி விடும்.

இதனை மிக இலகுவாக நாம் எமது கடந்தகால அனுபவங்களின் ஊடாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த அரசாங்கத்திற்கு முன்னர் இலங்கையில் கோலோச்சிய எந்த அரசாங்கமும் இலங்கை அப்பாவித் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொலைகளைச் செய்யவில்லையா? என்று நீங்களே உங்களிடம் கேட்டுப்பாருங்கள். பெருமளவு மக்கள் கொல்லப்பட்ட, இடம்பெயர்வுகள் பதியப்பட்ட ஜெயசிக்குறு போர் நடவடிக்கையின்போது இலங்கையும். இலங்கையின் அப்போதைய அரசும் எவ்வாறு சர்வதேச நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கொண்டது என்பதை அவதானித்துப் பார்த்தால் அப்போதைய அரசு உறுதியான தனது வெளியுறவுக் கொள்கையாக மேற்கு மட்டும் ஆசிய நாடுகளின் உறவுகளில் நெருக்கமான நிலையைக் கொண்டிருந் திருந்ததைக் காணலாம். அதனிலும் மிக முக்கியமாக இந்தியாவுடனான இலங்கையின் உறவு ஏனைய நாடுகளின் அவதூறுப் பார்வைகளை இலங்கை மீது விழ விடாமல் தடுக்கும் பெரிய அரணாக இருந்ததைக் காணலாம்.

அத்துடன் அக்காலத்தில் இலங்கை மீது படையெடுத்த சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கை மிகக் கவனமாகக் கையாண்டதுடன் எவ்விதப் பழிச் சொற்களையும் அத்தூதுவர்களின் மீது விரவாமல் இருந்ததையும் காணலாம்.

ஆனால் தற்போதைய அரசனாது மிகக் கடுமையாக மேற்குலக விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கின்ற பண்பைக் கொண்ட மைந்துள்ளது. அதற்காக ஆசியாவின் சர்வ வல்லமை பொருந்திய நாடான சீனாவுடன் கண்மூடித்தனமான உறவினை இலங்கை வளர்த்துள்ளது. அவ்வாறு வளர்ந்துள்ள இலங்கை-சீன உறவால் கடந்த கால அரசுகளுக்கு சர்வதேசச் சமூகத்தின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு அரணாகச் செயற்பட்ட இந்திய உறவை இலங்கை அரசு இழந்துவருகின்றது. இதனால் சர்வதேசச் சமூகத்தின் தாக்குதல்கள் நேரிடையக இலங்கை மீது விழத் தொடங்கி விட்டன. இது எமது கடந்தகாலப் படிப்பினையாகும்.

இவ்வாறானதொரு சர்வதே விடயத்தினையும் நாம் படிப்பினையாகக் கொள்ளலாம். இலங்கையின் விவகாரம் ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் பிரபல்யமாவதற்கு முன் பிரபல்யமாகப் பேசப்பட்ட விடயம் பர்மாவின் மனிதவுரிமை மீறல்களே.

இலங்கையை விட மிக மோசமான நிலையினை பர்மிய அரசு சர்வதேச அரங்கில் எதிர்கொண்டது. கடுமையான நடவடிக்கைகளை அந்நாட்டின் மீது மேற்கொள்ள சர்வதேசம் தயாரானது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால் பர்மிய இராணுவ அரசு தனது அரசுக்கட்டிலை இழந்து சர்வதேசக் குற்ற விசாரணைகளுக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் பர்மிய இராணுவ அரசு சர்வதேச சமூகத்துடன் சில விடயங்களில் ஒத்துழைத்து இயங்கத் தயாரானது. அதன் முதலாவது விடயமே சுமார் இருபத்தொரு வருடங்கள் வீட்டுக்காவலிலிருந்து பர்மிய சனனாயகத் தலைவி ஆங் சான் சூகி அவர்களை விடுதலை செய்தது. கடந்த மாதம் தன்னை 21 வருடங்கள் வீட்டுக் காவலில் வைத்திருந்த இராணுவத்தைத் தான் மிகவும் நேசிப்பதாக ஆங் சான் சூகி அவர்களின் வாயிலிருந்தே பர்மிய அரசு சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளது. அந் நாட்டின் மீது சர்வதேச நடவடிக்கைகளைப் பின்தள்ள இச் சான்றிதழ் போதுமானதாக இருக்கின்றது. மேற்சொன்ன விடயம் சர்வதேச படிப்பினையொன்றை எமக்குத் தருகின்றது.

மேற்பார்த்த இவ்விரு. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படிப்பினைகள் ஊடாக இலங்கை அரசானது தற்போது கூட சர்வதேசக் குற்ற விசாரணைகளிலிருந்து தப்பிச் செல்வதற்குப் பெரும் வாய்ப்பைக் கொண்டிருப்பதைக் காணமுடியும். இலங்கையைத் தண்டனைக் குட்படுத்துவதை சர்வதேசச் சமூகம் தமது மிகவும் இறுதிக்கட்ட முடிவாகவே கொண்டுள்ளது. ஏனெனில் இத் தண்டனையானது பொருளாதார ரீதியில் சில தாக்கங்களைச் சர்வதேசச் சமூகத்திற்கு விளைவிப்பதுடன் இராணுவ ரீதியிலும் சர்வதேசச் சமூகத்திற்குச் சாதகமானதாயிருக்கப் போவதில்லை. ஏனெனில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலிருந்து ஆங்கிலேயேத் தளபதி (அவரது பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை) "எவர் இலங்கையைத் தமது கட்டுக்குள் வைத்திருக்கின்றாரோ அவரே இந்துமகா சமுத்திரத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றிருப்பர்" என்றார். எனவே இராணுவ ரீதியில் இலங்கையிலிருந்து சர்வதேசச் சமூகம் தனித்திருக்க விரும்பாது என்பது கண்கூடு.

இப்போது இலங்கை அரசு இம் முன்மொழிவுகளை ஏற்காது விட்டால் அடுத்து என்ன நடக்கலாம் என்பதைப் பார்க்கலாம்.

இம் முன்மொழிவுகளை இலங்கை ஏற்காதவிடத்து இலங்கையின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஐநா சபை தனது பாதுகாப்புச் சபையிடம் முன்மொழிவினை மேற்கொள்ளும். ஐநா பாதுகாப்புச் சபையின் அனுமதியின்றி எவ்விதமான நடவடிக்கைகளையும் உரிய நாடுகளின் அனுமதியின்றி அந்நாட்டிற்குள் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ள முடியாது என்பது இங்கு கருத்திற்கொள்ளத் தக்கது. ஐநாவின் அனுமதியின்றி ஒரு நாட்டிற்குள் நுழைய வேண்டுமாயின் அந்நாடு -தற்போதுள்ள நிலைமைகளில்- நேட்டோவின் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்க வேண்டும். இலங்கையின் நிலைமை நேட்டோ நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இல்லாதமையால் இலங்கைக்குள் தன்னிச்சையாக எவரும் நுழையமுடியாது. எனவே ஐநா பாதுகாப்புச் சபை அனுமதியை பெறல் இங்கு அடுத்த கட்டத் தடையாக இருக்கும்.

இத் தடையைத் தாண்டுவது மிகக் கடினமே. ஏனெனில் வீட்டோ அதிகாரம் கொண்டு பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகளான ஐந்து நாடுகளில் சீனாவும், இரஸ்யாவும் இலங்கைக்கு தமது ஆதரவைக் கடுமையாக வழங்கி வருகின்றன. இதனால் இலங்கையின் மீது ஐநாவின் நடவடிக்கை அங்கு தடைப்பட்டு விடும் வாய்ப்புக்கள் உள்ளன.

அதனைத் தவிர்க்கும் முகமாகவே நான் ஏற்கனவே எனது கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டது போல முன்மொழிவுகள் மிகக் கவனமாக ஆராயப்பட்டு தனியே ஐநாவின் மனிதவுரிமைச் சபையை மட்டும் குறிவைத்துத் தயாரிக்கப்படாமல் அதற்கும் அப்பால் எதனையோ குறிவைத்துள்ளது என்றே னில்லையா? அக்குறி ஐநாவின் பாதுகாப்புச் சபையாகவே உள்ளது. இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காதவாறு உள்நுழையவே சர்வதேசச் சமூகம் முயற்சிக்கின்றது. அதற்கேற்பவே முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வகை முன்மொழிவுகளுக்கும் சவால்களைத் - தற்போது அமெரிக்கா எதிர் கொண்டுள்ளது போலத் தெரிகின்றது.

அமெரிக்கா முன்வைத்துள்ள மாதிரி முன்மொழிவுகளில் மேலும் மாற்றங்களைச் செய்யுமாறு இலத்தீன் அமெரிக்க நாடுகள் வேண்டுகோளை விடுத்துள்ளன. இவ் வேண்டுகோள்களை மிகவும் இராச தந்திரத்துடன் அமெரிக்கா அணுக வேண்டியிருக்கும். ஏனெனில் அவை விடுத்துள்ள வேண்டுகோள்களைப் புறக்கணித்தால் அந் நாடுகளின் ஆதரவை ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் இலங்கை இழந்துவிடும். மாறாக அந்நாடுகளின் முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்டால் அம் முன்னொழிவுகள் இலங்கையின் மீது பாரதூரமான நடவடிக்கைகளை பிரேரித்தி ருந்தால் அவற்றையும் உள்ளடக்கிப் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா அனுமதியைப் பெறுவது சாத்தியமற்றதாகி விடும். அடுத்து இந்தியா தற்போதுவரை தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதும் ஒரு சவாலான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. இறுதி முன்மொழிவுகளைப் பார்த்த பின்னரேயே அதனை ஆதரிப்பதா இல்லையா என்ற முடிவினை இந்தியா எடுக்கும் எனத் தெரிவித்துள்ளது . அதற்கும் மற்றொரு நிலையில் இலங்கை அமெரிக்காவுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தைகளை நடாத்தி அந் நாட்டினால் முன்வைக்கப்படவுள்ள பிரேரணைகள் தொடர்பாகச் சாதகமான அனுகுமுறைகளைப் பேண வேண்டும் என்றும் இந்தியா ஒரு வழியை இலங்கைக்குக் காட்டியுள்ளது. (இவ் வழியானது சிலவேளைகளில் அமெரிக்காவால் இந்தியாவூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்ட செய்தியாகவே இருக்கலாம்.)

ஐநாவின் மனிதவுரிமைச் சபையின் முன்மொழிவுகளை இலங்கை ஏற்காது போனால் ஒரு வழியாகப் பாதுகாப்புச் சபைக்கு தீர்மானங்களை கொண்டு செல்லும் நிலையுள்ளது. அங்கும் தளம்பலான நிலையே காணப்படுவதால் மற்றோர் வழியாக இலங்கைக்கு எதிரான நிலைப்பட்டிலுள்ள நாடுகள் தனித்தனியாக இலங்கையின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாம். அவை எவையென அடுத்த வாரம் பார்க்கலாம்.

-மாயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழன்

மயிரையும் வெட்டி நிற்பான்.
மாற்றுடைகளையும் தோய்ப்பான்!
தயிரையும் சுமந்து விற்பான்.
சாப்பறையதும் அடிப்பான்!
உயிரையோ பொருட்படுத்தான்.
உயர்மரம் ஏறி வைப்பான்!
பயிரையும் செய்வான். பாட்டும்
பாடுவான் தமிழன்தானே!

கழிமலம் எடுப்பான். வீதிக்
கஞ்சல்கள் கூட்டிநிற்பான்!
அழிபிணம் கீறித் தைப்பான்.
அரங்கிலும் நடிப்புக்காட்டி -
விழியெனும் தமிழும் பேசி -
விடுதலைப்போரும் செய்து
பழிப்பினும் உலகம். பொல்லாப்
பாவி தேய்ந்தழிகிறானே!

தமறைரக்கீனைள்

## நாற்றிங்கள்

பத்துமுறை குறள் கற்றும்
பதினோராம் முறை கற்பேன்!
பத்துப்பத்தாய்க் கற்றால்
பாமுடியும் நாற்றிங்கள்!

காலம்பொன் ஆகுமெனில்
கலப்புநூல் எல்லாம்வீண்!
ஞாலத்தில் வாழ்வதற்கு
நாள் போதாமற்போகும்!

தனித்த தமிழ் இருக்க -
எங்கள் திருக்குறளில்
இனிக்காத நூல்களிலே
ஏன் பொழுது போக்குவதோ?

என்ன குறைகள் உள.
எங்கள் திருக்குறளில்?
சின்னதுதான் அச்சாணி.
தேர்பெரிது - எதுமூலம்?

கல்விகரை இலதாம்
கற்போர்க்கு நாள் சிலவாம்!
கொல்லும் பிணிபலவாம்
குறைதீர்க்குமாம் குறளே!

கற்கக்குறள் தேர்ந்தால்
கசடு அறக்கற்போம்!
நிற்போம் குறள் வழியில்.
நெஞ்சுக்குள் வைத்திடுவோம்!

உரைகள் பல உண்டாம்.
உண்டாம் குழந்தை உரை!
இரை வேண்டும் உடலுக்கு.
இது வேண்டும் உளத்துக்கு!

எல்லோரும் கற்றியங்க
ஏற்றநூல் உண்டென்றால்
நல்ல திருக்குறளே -
நாடுங்கள் இப்பொழுதே!

## ஒலி செய்வாய்

மலைமுரசே மலைமுரசே.
வாழிய நீ பல்லாண்டு!
நிலையான கொள்கையொடும்
நீள் பணிகள் ஆற்றுகவே!
மலைபோனால் முரசில்லை.
மறவாமல் செயல்படுக!
தலைபோனால் உடல் இல்லை.
தமிழ்போனால் யாம் இல்லை!

தொட்டுக்கேள் கிடைத்துவிடும்.
தொடர்தேடு கண்டிடலாம்!
தட்டிப்பார் திறபடலாம்.
தடைதாண்டின் குறியிடமே!
கொட்டிப்பார் குப்பை எடு.
கூடிப்பார் நட்பை அறி!

எட்டிப்பார் ஏறேணி
எல்லாம் தெரிந்துவிடும்!

தம்பிரா சாவைப்போல்
தடவியே சேமிப்பாய்!
வெம்பியே விடவேண்டாம்.
விடுதலையே உயிர்நாடி!
நம்பிநம்பிக் கடைசியிலே
நட்டாற்றில் வீழாதே!
வம்பு வசவாளர்களை
வாழ்த்திவிடு அண்ணாபோல்!

சரவணபவனாரும்.
தகுதில்லை பவித்திரரும்.
தரமாம் செந்தூரருடன்.
தக்க பிரதீபாவும்.
உரமூட்டும் மாயனுடன்.
உரை ஆய்மயூரர் - பிறர்
முரசுன்னைத் தட்டுங்கால்
முறையாய் ஒலி செய்வாய்!

## சம்பூர் தீர்மானிக்கும்..

ஐநூறு மெகாவோட் மின்சாரத்தை அனல் மின் நிலையம் ஊடாக உற்பத்தி செய்து இலங்கைக்கு வழங்க இந்தியா மேற்கொள்ளும் முயற்சி ஒன்றும் இலங்கை மீது இந்தியா கொண்டுள்ள காதலால் அல்ல எனத் தெரிவித்த அவர் இம் மின் உற்பத்தி ஒப்பந்தம் ஊடாக பெருமளவு இலாபம் உழைப்பவர்கள் இந்தியர்களே என மேலும் தெரிவித்தார்.

"இந்தியாவின் பல பிரதேசங்கள் இன்னமும் மின்வலுவைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கின்ற நிலையில் இலங்கையின் மின் தட்டுப்பாட்டை நீக்க அந்நாடு முனைவது இலங்கையின் சுருக்கை எறியும் செயலே அன்றி அன்பினால் அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2009ல் இரு நாடுகளுக்கிடையேயும் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இந்திய வெப்ப ஆற்றல் கூட்டுத்தாபனத்திற்கும் (National Thermal Power Corporation) இலங்கை மின்சார சபைக்குமிடையே ஐநூறு மெகாவாட் மின்சாரத்தை சம்பூரில் அனல் மின் நிலையமொன்றை அமைப்பதன் மூலம் உருவாக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

எனினும் அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இலங்கைக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் கண்டறிந்ததைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபைக்கும் இந்திய வெப்ப ஆற்றல் கூட்டுத்தாபனத்துக்கும் இடையே "வலுக் கொள்வனவு ஒப்பந்தத்தை" (Power Purchase Agreement) உருவாக்குவது தொடர்பாய் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

வலுக்கொள்வனவு ஒப்பந்தத்தில் ஒப்பமிடமுன் இலங்கை மூன்று விடயங்களை மாற்றியமைக்கும்படி இந்திய வெப்ப ஆற்றல் கூட்டுத்தாபனத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இத்திட்டத்தில் முதலிடப்படவுள்ள நான்காயிரம் கோடி ரூபாய்களிலிருந்து இந்தியா தனது முதலீட்டில் இருந்து ஆண்டுதோறும் பதினெட்டு சதவீத வருமானத்தை எதிர்பார்த்திருக்கின்றது. அதனைப் பன்னிரண்டு சதவீதமாகக் குறைக்கவும் குறைந்த நிலக்கரியை எரித்து கூடிய மின்சக்தியை பெறுமாறு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கையினால் விடப்பட்ட கோரிக்கைகளை கடந்த பெப்ரவரி மாதம் நடந்த கூட்டத்தில் இந்திய கம்பனி மறுதலித்திருந்தது. இதைத்தொடர்ந்து அனல் மின் நிலையப் பணிகளுக்காக இலங்கையிலிருந்த இரு இந்திய நிபுணர்களை இந்திய கம்பனி மீள அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எனவே இலங்கைக்கு எதிரான ஜெனீவாத் தீர்மானத்தை இந்தியா கையில் வைத்துக்கொண்டு இலங்கையைத் தனது வழிக்குக் கொண்டுவரும் முயற்சியை இந்தியா செய்யும் என மின்சார சபை ஊழியர் சங்கத் தலைவர் எதிர்வு கூறியுள்ளார்.

## அதிகளவான மழைவீழ்ச்சி..

மணிக்கு முற்பட்ட இருபத்தினான்கு மணி நேரத்துள் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 74மிமீ மழை வீழ்ச்சி திருகோணமலை மாவட்டத்தில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கந்தளாய் குளத்தின் அணைக்கதவுகள் ஏற்கனவே திறந்துவிடப்பட்ட நிலையில் மீண்டும் சில வான்கதவுகள் மேலதிகமாக திறந்து விடப்பட்டன. மேலும் கடும் மழையால் பராக்கிரம சமுத்திரமும் நிரம்பியுள்ளமையால் அக்குளத்தினதும் வான் கதவுகள் திறந்துவிடப்படும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பராக்கிரம சமுத்திர வான்கதவுகள் திறந்துவிடப்படுமாயின் புல்மோட்டைப் பிரதேசம் வெள்ளத்துள் மூழ்கும் அபாயமும் காணப்படுகிறது. ஏற்கனவே பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் புல்மோட்டையின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு . அப்பிரதேசங்களுக்கு நிவாரணங்களும் துரிதப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நானூறு ரூபாய் அறைகள்..

மாத்தறை மாநகரசபைக் கூட்டமொன்றில் அவர் தெரிவித்துள்ளார். மாத்தறை நகரில் "400 ரூபாவிற்கு அறைகள் உண்டு" என்ற வாசகத்துடன் பெருமளவு விடுதிகள் உள்ளன. இவ்வாறான விடுதிகளிலேயே இவ் வன்புணர்வுகள் அதிகம் நிகழுகின்றன எனத் தெரிவித்த அவர் சமூகச் சீர்கேட்டை விளைவிக்கும் இவ் வகை விடுதிகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## எங்கள் பள்ளிவாசல்களை..

புத்துடன் நாம் எமக்கென ஒரு நாட்டை அவ் அரசுகளுடன் எப்போதுமே கோரவில்லை. அரசாங்க ஆதரவாளர்களாகவே நாம் எப்போதுமே செயற்பட்டு வருகின்றோம் இந்நிலையில் முஸ்லிம்களின் வணக்கத்தலங்களைத் தாக்குவது மிகக் கவலைதரும் விடயமாகும் என திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார். பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையே இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளது.

"இனந்தெரியாதவர்களே பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவ்வினந்தெரியாதவர்களிடமிருந்து பள்ளிவாசல்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெற்கொள்வனவு..

(816.29 மி), பிராந்திய அபிவிருத்தி வங்கி (205.54 மி) தேசிய சேமிப்பு வங்கி (384.69 மி), இலகு கடன் வசதியூடாக பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலதிகத் தேவைகள் ஏற்படுமிடத்து மேலும் 700 மில்லியன் ரூபாய்களை நெற்கொள்வனவுக்கென திறைசேரியால் பேணப்படும் சூழலும் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அடிக்கல் நாட்டப்பட்டது..

இருபது லட்சம் ரூபா மதிப்பீட்டில் அமையவிருக்கும் இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே அவர்கள் நாட்டி வைத்தார். நிகழ்வில் திருக்கோணமலை பிரதேச செயலாளர் திருமதி. ஜெலதீபன், திருக்கோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. என். விஜேந்திரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் இச் செயற்திட்டத்தில் லிங்கநகர் கோணலிங்க வித்தியாலயம் மற்றும் அபயபுர சிங்கள மத்திய மகா வித்தியாலயம் என்பன தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## முஸ்லிம், தமிழ் பகுதிகள் புறக்கணிப்பு..

இந்நிலையிலேயே தவிசாளர் எஸ்.எம்.சுபியான் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மூதூர் தேர்தல் தொகுதிக்குள் பெரும்பான்மையாக உள்ளடங்கும் தம்பலகாமம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசமானது மூவின மக்களும் (முஸ்லிம் 53%, சிங்களம் 27%, தமிழ் 20%) ஒற்றுமையாக வாழும் பகுதியாகும். கடந்த கால யுத்த சூழ்நிலையின் போது மூன்று சமூகங்களும் இழப்புகளை சந்தித்ததோடு முழுப் பிரதேசமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுடையவையாகக் காணப்படுகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தினூடாக நாட்டு மக்கள் அனைவருக்கும் இன, மத, கட்சி பேதங்களில்லாமல் சேவைகள் இடம்பெற்றுவரும் வேளையில் தம்பலகாமம் பிரதேசத்தில் மாத்திரம் இனங்களுக்கிடையே துவேசத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாகுபாடான முறையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2012ஆம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேசத்தின் வீதி அபிவிருத்திப் பணிக்காக கமநெகும திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 6,090,000 ரூபா, "யலி புபுதும" மற்றும் குளங்கள் புணரமைக்கும் வேலைத்திட்டங்களினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட கோடிக்கணக்கான நிதிகளும் சிங்களக் கிராமங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டன. அத்துடன் 2013ஆம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் தம்பலகமம் பிரதேசத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 123 மில்லியன் 'ரூபாவில் 80 மில்லியன் ரூபா சிங்களப் பிரதேசத்திற்கும் 25 மில்லியன் 'ரூபா முஸ்லிம் பிரதேசத்திற்கும் 18 மில்லியன் 'ரூபா தமிழ்ப் பிரதேசத்திற்குமென பங்கீடு செய்யப்பட்டுள்ளன இவ்வாறு இனரீதியான துவேசத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் முகமாக பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்களின் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் ஒன்றுகூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம். தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தினை பகிஸ்கரித்தல், இப்பிரதேசத்திற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை இன விகிதாசார அடிப்படையில் பங்கீடு செய்யப்பட வலியுறுத்தல், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தங்களை குறிப்பிட்ட பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கே வழங்க நடவடிக்கை எடுத்தல், பிரதேச அபவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு முஸ்லிம் தமிழ் பிரதேசங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தல் ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளன.

## இலங்கையர் மீதான தாக்குதல்கள்

### இலங்கை தனது கடும் கருத்தை இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

புது டெல்லியிலும், சென்னையிலும் நிலை கொண்டுள்ள இலங்கைத் தூதுவர்கள் இந்தியாவில் இலங்கைக்கெதிரான நடவடிக்கைகளின் போது இலங்கையர்கள் தாக்கப்படுவது தொடர்பாக தமது கடும் கருத்தினை வெளியிட்டுள்ளனர். இவ்விடயத்தை புதுடெல்லியிலும் சென்னையிலும் உள்ள பொருத்தமான அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ள இவர்கள், இந்தியாவில் வாழும் மற்றும் இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பினைப் பலப்படுத்துமாறு வேண்டுகோளையும் விடுத்துள்ளனர்.



## வடக்கில் 15000 சிங்களவர்கள்

வடக்கில் பதினையாயிரம் சிங்களவர்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இவர்கள் வெலி ஓயா, வவுனியா மற்றும் பதவியா ஆகிய பகுதிகளில் குடியேற்றப்படவுள்ளனர். இவ்வாறு குடியேறுபவர்களுக்கு 850 வீடுகளை நிர்மாணிக்க உள்ளதாகவும் இதில் 500 வீடுகள் நிர்மாணிக்கும் பணி விரைவில் முடிவடையவுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாஸ தெரிவித்துள்ளார்.

## ஜின்னா நகரில் வீதிகள் புனரமைப்பு

திருகோணமலையின் ஜின்னா நகர் கிராமத்தில் நெடுநாட்களாக புனரமைக்கப்படாமலிருந்த வீதிகள் பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயின் நான்கு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்செயற்திட்டத்தில் ஜின்னா நகரின் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆறாம் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதோடு அவ்வீதிகளுக்கான வடிகாலமைப்புக்களும் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறிய கொசுவிடம் ஏமாந்த சிங்கம்

ஒரு காட்டில் சிங்கராஜா ஒன்று இருந்தது. அதற்கு தன்னுடைய பலத்தின் மீது மிகுந்த பெருமை. தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நினைப்பில் அந்த காட்டில் வாழும் சிறிய மிருகங்களை எல்லாம் பாடாய்படுத்தியது. இதனால் சின்ன மிருகங்கள் எல்லாம் ஆண்டவரிடம் அழுது புலம்பின. உடனே ஆண்டவர் ஒரு சிறிய கொசுவை கொண்டு சிங்கத்திற்கு பாடம் புகட்ட விரும்பினார்.

ஒருநாள் சிங்கம் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக ஒரு கொசு வந்தது.

முதலில் தன் காதருகே வந்து ரீங்காரமிட்ட கொசுவைப் பற்றி சிங்கம் அலட்சியமாக நினைத்தது. திரும்பத் திரும்ப கொசு தொந்தரவு கொடுக்கவே சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது.

…"யாரவன் எனக்குத் தொந்தரவு கொடுப்பது?" என்று உருமிக் கொண்டே கோபத்துடன் சிங்கம் எழுந்தது.

கொசு கலகலவென நகைத்து, "சிங்க ராசாவே என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் தான் கொசு," என்றது.

"நீ யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போ. என்னிடம் வந்து ஏன் தொந்தரவு செய்கிறாய்?" என்று சிங்கம் கேட்டது.


"நான் உங்களிடம் சண்டை போட வந்து இருக்கிறேன். முடியுமானால் என்னிடம் சண்டையிட்டு என்னைத் தோல்வியுறச் செய்யுங்கள் பார்க்கலாம்," என கொசு சவால் விட்டது.

"உனக்கு என்ன திமிர்? அற்ப ஜந்துவாகிய நீ என்னிடமா சண்டைக்கு வந்திருக்கிறாய்? நான் மூச்சு விட்டால் கூட நீ நிர்மூலமாகி விடுவாயே," என்று கூறியவாறே சிங்கம் தன் முன்னங்கால்களை அதனிடம் வீசியது.

கொசுவோ மிகவும் சுலபமாகத் தப்பித்து அப்பால் பறந்து சென்றது. கொசு தொலைந்தது என்று எண்ணிக் கொண்டு சிங்கம் நிம்மதியாகப்படுத்தது. ஆனால் கொசு மறுபடியும் வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. சிங்கத்திற்குக் கோபம் தாள முடியவில்லை. ஆகவே மறுபடியும் கொசுவை விரட்டியது. கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு சிறிய உருவமாக இருந்த கொசு மிகவும் எளிதாக சிங்கத்தை ஏமாற்றி அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தது.

நெடுநேரம் சிங்கமும், கொசுவும் போராடின. அற்பக் கொசுவை சிங்கத்தால் என்ன செய்ய முடியும்? அதை விரட்ட, விரட்ட திரும்பத் திரும்ப வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தது. கொசுவை ஒன்றும் செய்ய முடியாமல் சிங்கம் சோர்ந்துவிட்டது. ஓய்ந்து போய்க் கீழே படுத்துக் கொண்டது.

கொசு கைகொட்டி ஏளனச் சிரிப்புச் சிரித்தது. "மிருகங்களுக்கே அரசன் என்று சொல்லிக் கொள்ளும் உம்முடைய பலம் என்னிடம் பலிக்கவில்லை பார்த்தீரா? உம்மைவிட நான் பலசாலி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவே நான் தான் இந்தக் காட்டிற்கு அரசன்," என்று வெற்றி முழக்கம் இட்டது. சிங்கம் வெட்கி தலை குனிந்தது.




# அனைத்துலகப் பெண்கள் நாள் உருவானது எப்படி?

மார்ச் 8ம் தேதியை உலக மகளிர் தினமாக கொண்டாடி வருகிறோம். வீட்டிற்குள்ளே இருந்த பெண் சமுதாயம் தற்போது வானில் பறந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றி தினமே இந்த மகளிர் தினமாகும். .மார்ச் 8-ல் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடுவது ஏன்? மார்ச் 8-ம் தேதிக்கும், மகளிருக்கும் என்ன சம்பந்தம் என்று உழைக்கும் கீழ்த்தட்டுப் பெண் வர்க்கமே அறிந்து கொள்ளாத தினமாகத்தான் இந்தப் பெண்கள் தினம் இன்றும் இருக்கிறது.சர்வதேச மகளிர் தினம் என்று ஒருநாள் வருவதற்குக் காரணமே இந்த உழைக்கும் பெண் வர்க்கம் தான் என்பது தங்கமுலாம் பூசப்படாத உண்மை!

மார்ச் 8 என்றால் சர்வதேச மகளிர் தினம் என்று நாமனைவரும் அறிவோம். ஆனால், எதற்காக மார்ச் எட்டாம் தேதியைக் குறிப்பாக தேர்ந்தெடுத்தார்கள்? சற்று வரலாறுகளில் பின்னோக்கித் தேடினால் வியப்பூட்டும் பல தகவல்கள் நமக்குக் கிடைக்கும். 1789ம் ஆண்டு ஜூன் 14ம் தேதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரநிதிநித்துவம் (அரசனின் ஆலோசனை குழுக்களில்) என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர்! ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்!

கிளர்ச்சிகள் என்றால் அதன் தீவிரம் புரிவதற்கு, அடுப்பூதும் பெண்கள், இடுப்பொடியப் பாடுபடும் பெண்கள் கையில் கிடைத்த ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பாரிஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரை துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இடியென முழங்கி, "இவர்களை என் அதிகாரம் கொண்டு அடக்குவேன் என்றும்" ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் எனவும் அறிவித்தான்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம்! அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க அரச மாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது!

அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரென கூட்டத்தினர் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். கோரிக்கைகளை கண்டிப்பாக பரிசீலிப்பேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப் படுத்தினான். இயலாது போகவும், அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான். இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்!

தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா




தலைமையில் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்டநாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

பிரான்சில், புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க், பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்த நாள் 1848-ம் ஆண்டு மார்ச் 8-ம் நாளாகும்! அந்த மார்ச் 8-ம் நாள் தான் மகளிர் தினம் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

உலக மகளிர் தினத்தை வேண்டுமானால் நாம் எளிமையாகக் கொண்டாடலாம். ஆனால் இந்த உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்குக் காரணமான போராட்டமும், அதன் வெற்றிகளும் அவ்வளவு எளிதாகக் கிட்டியதல்ல. ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது. 18-ம் நூற்றாண்டில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றினர். மகளிர் வீட்டு வேலைகளை செய்யும் பொருட்டு வீடுகளில் முடக்கி வைக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலான பெண்களுக்கு ஆரம்பக் கல்வி கூட மறுக்கப்பட்டது. மருத்துவமும், சுதந்திரமும் என்னவென்று கண்ணில் காட்டப்படாமல் இருந்த காலம் அது. இந்த நிலையில்தான் 1857-ம் ஆண்டின் நடந்த போரினால் ஏராளமான ஆண்கள் கொல்லப்பட்டதும், படுகாயமடைந்து நடக்க முடியாத நிலைக்கு உள்ளானதும் நிகழ்ந்தது. இதனால் உலகின் பல நாடுகளில் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனைத் தவிர்க்க நிலக்கரிச் சுரங்கள் மற்றும் தொழிற்சாலைகள், நிறுவனங்களில் மகளிருக்கு பணி வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த சந்தர்ப்பம்தான் அடுப்பூதும் பெண்களால் தொழிற்சாலைகளிலும் திறமையாக பணியாற்ற முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்தது. ஆண்களுக்கு நிகராக பெண்களாலும் வேலை செய்ய முடியும் என்று பெண் சமுதாயமே அப்போதுதான் புரிந்து கொண்டது.

எது எப்படி இருந்தாலும், வேலை பார்க்கும் இடங்களில் ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. (அது இன்று வரை பல இடங்களில் தொடருவது மற்றொரு பிரச்சினை). இதனால் பெண்கள் மனம் குமுறினர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் கோரி பெண்கள் எழுப்பிய குரலுக்கு அப்போதைய அமெரிக்க அரசு செவிசாய்க்கவில்லை. அமெரிக்காவின் தொழிற்புரட்சி நகர் நியூயார்க், இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணிநேரம் வேலை செய்து மிகக் குறைவான ஊதியத்தைப் பெற்றனர். அந்த ஊதியத்தைப் பெறுவதற்குக் கூட நிர்வாகத்தில் உள்ளவர்களின் உடற்பசிக்கு இணங்கினால் தான் கிடைக்கும் என்ற நிலை இருந்தது.

1857-ல் நியூயார்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர். பெண்களின் முதல் குரல் ஒலிக்கத் தொடங்கியது பொன்னாள்! தொடர்ந்து போராட்டங்கள், பெண்கள் அமைப்புகள் தோன்றின. இதனால் அமெரிக்கா முழுவதும் கிளர்ந்தெழுந்த பெண் தொழிலாளர்கள் 1857-ம் ஆண்டு மார்ச் 8-ம் தேதி போராட்டத்தில் குதித்தனர். துணிகளை உற்பத்தி செய்யும் மில்களில் பணியாற்றிய பெண்கள் தான் இப்போராட்டத்திற்கு தலைமை ஏற்றனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மில் உமையாளர்கள் இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் அடக்கினர். வெற்றி பெற்றதாக பகல் கனவும் கண்டனர். ஆனால் அந்த பகல் கனவு நீண்ட நாட்களுக்கு பலிக்கவில்லை.

அடக்கி வைத்தால் அடங்கிப் போவது அடிமைத் தனம் என்று பெண் தொழிலாளர்கள் 1907-ம் ஆண்டில் மீண்டும் போராட்ட களத்தில் குதித்து சம உமை, சம ஊதியம் கோரினர். இதைத் தொடர்ந்து டென்மார்க் நாட்டில் உள்ள கோபன்ஹேகன் நகரில் 1910 ஆம் ஆண்டில் பெண்கள் உரிமை மாநாடு நடைபெற்றது. இதில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்துக் கொண்டு தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டின.

இந்த மாநாட்டில் கலந்துக் கொண்ட ஜெர்மனி நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கிளாரே செர்கினே, ஒரு கோரிக்கை தீர்மானத்தை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினர். அந்த தீர்மானத்தின் முக்கிய சாராம்சமாக மார்ச் மாதம் 8-ம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். பெண்களை அடக்கி ஆள நினைத்த ஆண் சமுதாயம் இதற்கு ஒப்புக் கொள்ளுமா அல்லது இந்த தீர்மானம் நிறைவேற வழி ஏற்படுத்துமா பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேற முடியாமல் போனது.

இதற்கிடையே பெண் தொழிலாளர்கள் அமைப்பினர் ஆங்காங்கே உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கியிருந்தனர். 1920-ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்ட்ரா கெலன்ரா கலந்து கொண்டார்.

அவர் தான் உலக மகளிர் தினத்தை ஆண்டு தோறும் மார்ச் 8-ம் தேதி நடத்த வேண்டும் என்று பிரகடனம் செய்தார். இதையடுத்து 91 ஆண்டுகளுக்கு முன்பு 1921-ம் ஆண்டில் உலக மகளிர் தினத்தைக் கொண்டாடத் தொடங்கினர். அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ம் தேதியை நாம் மகளிர் தினமாகக் கொண்டாடி வருகிறோம். நன்றி. - ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### அரச நிறுவனங்களுக்கு இனி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன் வசதி கிடைக்காது.

எரிபொருள் செலவு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தற்போது வரை அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் கடன் வசதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளாதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார். வருடாந்தம் பெற்றோலிய கோட்டாவைப் பெற்றுக்கொள்ளும் அரச நிறுவனங்கள் அக்கோட்டாவின் எல்லைகளை மீறும் போது அக்கோட்டாவை முற்று முழுதாக இழக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வாறு கோட்டாவை மீறும் 2 அரச நிறுவனங்களாக இலங்கை மின்சார சபையும், இலங்கையின் விமான சேவையான ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் உம் கடந்த வருடங்களில் முத்திரையிடப்பட்டிருந்தன. இலங்கை மின்சார சபை தற்போது வரை 28.3 பில்லியன் ரூபாய்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள அதே வேளை ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் 27.4 பில்லியன் ரூபாய்களை செலுத்தவேண்டியுள்ளது. அவ்வாறே இலங்கையின் கடற்படை 6.7பில். ரூபாவும், இலங்கைப் புகையிரத சேவை 5.3 பில். ரூபாவும் இலங்கை இராணுவம் 4.1 பில். ரூபாவும் இலங்கை விமானப்படை 1.8 பில். ரூபாவும் செலுத்தவேண்டியுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்து வரும் நட்டத்தினை நிவர்த்திப்பதற்காகவே பெப்ரவரி 24 ஆந் திகதி எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்போது டீசல் 6 ரூபாவாலும் பெற்றோல் 3 ரூபாவாலும் அதிகரித்தது. அத்துடன் ஏப்ரல் 1ஆந் திகதி முதல் மின்வலு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உயர்ந்த மற்றும் தாழ்ந்த கந்தக செறிவுடைய எரிபொருட்களின் விலையை மேலும் அதிகரிக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. தற்போது வரை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்த நட்டத்தினை நிவர்த்திப்பதற்காக பெற்றுக்கொண்ட கடன்களுக்கான வட்டியாக மட்டும் 18 பில்லியன் ரூபாய்கள் செலுத்த வேண்டியுள்ளது.

### இந்திய தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் திட்டம் நிறுத்தப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களை முன்நிறுத்தி இந்தியத் தொழிலாளர்களை இலங்கையின் வயற்களங்களில் குறுங்காலத்துக்கு வேலைக் கமர்த்தும் விவசாய அமைச்சின் முடிவு நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்படுபவர்களுக்கு குறுங்கால வதிவிட அனுமதியை வழங்கி வடக்கு கிழக்கு வயற் பிரதேசங்களில் வயற்றொழிலுக்காக அமர்த்திக் கொள்ளும் திட்டத்தை விவசாய அமைச்சு ஏற்கனவே முன்மொழிந்துள்ளது. எனினும் பாதுகாப்புக் காரணங்களால் இத்திட்டத்தை கைவிட்டுள்ளதை அறிவித்த அமைச்சு அதற்கு மாற்றீடாக வடக்கு கிழக்கிலுள்ள இளைஞர்களை விவசாயத் துறைகளில் பயிற்சியளிப்பது என முடிவெடுத்துள்ளது.

### இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படை மேலும் ஒரு கடற்படைக் கப்பலை கடலில் நிறுத்தியுள்ளது.

இலங்கையின் வடமேற்குக் கடற்பரப்பின் ஊடாக அதிகளவு இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்பிரதேசத்துள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால் இலங்கை மீனவருக்கும் இந்திய மீனவருக்குமிடையே எழுந்துள்ள முறுகலைத் தணிக்குமுகமாக இலங்கைக் கடற்படை கப்பலொன்று அப்பிரதேசத்தில் நங்கூரமிட்டுள்ளது. அண்மையில் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து 2 டோரா படகுகள் அப்பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் இவ்வடமேற்கு கடற்பரப்பில் 250க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடி ரோலர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் இலங்கையர்களின் மீன்பிடித் தொழில் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. பலநாள் கடற்றொழிற் சங்கத் தலைவர் அன்ரன் ரெக்ஸ் இன் கருத்துப் படி இலங்கை கடற்படை இச்செய்தியை அறிந்த பின்னும் தாமதமாகவே செயற்படுவதாக தெரிவித்தார்.

## The Sunday Observer:

### ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அமர்வில் இலங்கை அணி அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபை அமர்வுகளுக்காக அங்கு சென்றிருக்கும் இலங்கைக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் "இக் கூட்டத்தொடரில் அமைச்சர் பங்குபற்றாது இருந்திருந்தால் இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பாக நீண்ட ஆழ்ந்த பேச்சினை நிகழ்த்த முடியாது இருந்திருப்போம்.'' என தெரிவித்துள்ளார். 20 நிமிடங்கள் இக்குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவால் இலங்கையிலுள்ள மனித உரிமை தொடர்பான சகல விடயங்களையும் சேர்த்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் உரையாற்றப்பட்டது. இவ்வுரையினைத் தொடர்ந்து பல நாடுகள் இலங்கையினை வாழ்த்தியதுடன் இவ்வுரை ஐக்கிய நாடுகள் சபையில் நிகழவிருக்கும் இலங்கைக்கெதிரான முன்மொழிவுகளை சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கம் மனித உரிமைச் சபையில் திரையிடப்பட்ட சனல் - 04 இன் ஆவணப்படம் தொடர்பான கடுமையான தனது எதிர்ப்பினை வெளியிட்டார். அவ் எதிர்ப்பில் அவர், இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் நிகழவுள்ள விலாசத்தை நோக்காகக் கொண்டு தந்திரோபாயமாக உருவாக்கப்பட்ட சோடிக்கப்பட்ட ஒரு முயற்சி என அத்திரையிடலை விழித்திருந்தார்.

### எல்லை நிர்ணயக் குழுக்கள் தமது அறிக்கைகளை முன்நிலைப்படுத்தவுள்ளனர்

தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணய குழுக்கள் தமது அறிக்கைகளை மார்ச் 31ந் திகதியிலிருந்து ஒன்றிணைக்கவுள்ளதாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். தற்போது எல்லை நிர்ணயக் குழுக்கள் பொதுமக்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள், தன்னார்வ நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து எல்லை நிர்ணயம் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று வருகின்றன. இவ்வாறு பெற்றுக்கொள்ளும் ஆலோசனைகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்காக குறித்த பிரதேசங்களுக்கு நேரடியாக செல்லவும் உள்ளனர்.

### உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டப்படிப்புகளிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை

அமைச்சுக்களை மேற்பார்வை செய்தல் என்ற தனது திட்டத்தினடிப்படையில் சனாதிபதி அண்மையில் உயர்கல்வி அமைச்சின் 2013 - 2015 ஆம் ஆண்டுக்கான இடைக்கால தேசிய உயர்கல்வி தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தை மீள்பார்வை செய்தார். 2020ம் ஆண்டில் இலங்கையை உயர்கல்விக்கான முக்கிய இடமாக உயர்த்துவது உயர் கல்வி அமைச்சின் இலக்காகவுள்ளது. இதனை அடைவதற்கு 12 குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று ''அனைவருக்கும் உயர்கல்வி" என்பதாகும். இதனடிப்படையில் தற்போது 21,000 மாணவர்களை உள்ளீர்க்கக் கூடியதாகவுள்ள அரச பல்கலைக்கழகங்களின் உள்ளீர்ப்புச் சக்தியை 2015ல் 25,000 ஆக அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தென் ஆசியாவின் மிகச் சிறந்த 55 பல்கலைக்கழகங்களுள் இலங்கையின் 6 பல்கலைக்கழகங்கள் அடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தொகையினை 10 ஆக அதிகரித்துக்கொள்ள கல்வியமைச்சு முயற்சிக்கின்றது.

### ஜெர்மனிய பாராளுமன்றத்தில் இலங்கைக்கெதிரான பிரேரணை தோல்வி

ஜெர்மனிய பாராளுமன்றத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணையொன்று தோற்கடிக்கப்பட்டுள்ளது. நீதி, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஐ.நா.வின் மனித உரிமைச் சபையைப் பயன்படுத்துவது எனும் தலைப்பில் கொண்டுவரப்பட்ட ஜெர்மனிய எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியினால் முன்மொழியப்பட்ட பிரேரணையே தோற்கடிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### தடயங்களைக் கோருகின்றது இலங்கை இராணுவம்

இலங்கை அடிப்படைவாத முஸ்லீம்களின் பாதுகாப்புக்கு குந்தகமான செயற்பாடுகள் தொடர்பான பொதுபல சேனா அமைப்பினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மீதான சான்றுகளை கையளிக்குமாறு இலங்கை இராணுவம் கோரியுள்ளது. கடந்த வாரம் இராணுவத்துடனும், காவல் துறையினருடனும் பொதுபல சேனா மேற்கொண்ட கூட்டங்களின் போது அவ்வமைப்பு சுமார் 10 முஸ்லீம் அடிப்படை வாத அமைப்புக்கள் இயங்குவதாக தெரிவித்திருந்தது. இராணுவ தளபதியுடன் ஐ.நா. விற்கான இலங்கையின் உதவி வதிவிடப் பிரதிநிதி மேயர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பொதுபல சேனா அமைப்பு இம்முஸ்லீம் இயக்கங்களை இல்லாதொழிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பான மேலதிக விடயங்களை அறிய முற்பட்ட வேளை வணக்கத்துக்குரிய எம்பிலிபிட்டிய விஜித தேரோ, தாம் இராணுவத்திடம் இவ்விடயம் தொடர்பான ஆவணங்களை கையளித்துள்ளதாகவும் அவ்வாவணங்களின் அடிப்படையில் ஆழ்ந்த விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் காவல்துறை மாஅதிபரை கடந்த வாரம் சந்தித்த பொதுபல சேனா அமைப்பினர் புத்த சமயத்தின் பெயரால் புத்த சமயத்திற்கு பங்கம் விளைவிக்கும் அமைப்புக்கள் தொடர்பாக தமது கரிசணையை வெளியிட்டிருந்தனர். தெருவில் புத்த சமயத்திற்காக காசு தரும்படி பிச்சையெடுக்கும் காவியுடை தரித்தவர்களில் பலர் உண்மையில் புத்த பிக்குகள் அல்ல என அவர்கள் காவல்துறை மாஅதிபருக்குத் தெரிவித்தனர்.

### உயிர்ப்பயத்தை நோக்கியுள்ள ஹிருணிக்கா

கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிக்கா தான் உயிரச்சத்துடன் வாழ்வதாக தெரிவித்துள்ளார். தனது தந்தையின் கொலை தொடர்பான உண்மை நிலையினை தெரிந்து கொள்வதற்காக தான் மேற்கொள்ளும் முயற்சிகளாலேயே தனது உயிர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மார்ச் 14ந் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள பிரேமசந்திரவின் கொலை வழக்கின் பிரதான சூத்திரதாரி என சந்தேகப்படும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா அத்திகதியில் நீதிமன்றில் காவல்துறையினரால் முன்நிலைப்படுத்தப்படவுள்ளார். இந்நிலையிலேயே ஹிருணிக்கா தனக்கு உயிரச்சுறுத்தல் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

### சிறைக்கலவர அறிக்கையினை முன்னிலைப்படுத்துவது தாமதமாகின்றது.

கடந்த வருடம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிகழ்ந்த கலவரங்கள் தொடர்பான அறிக்கையினை வெளியிடுவது மேலும் தாமதமாகியுள்ளது என சிறைச்சாலை அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையினைத் தயாரிக்கவென நியமிக்கப்பட்ட குழு அறிக்கையினைத் தயாரிக்க இன்னும் கால அவகாசம் தேவையென கேட்டுக்கொண்டதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் நடந்த கலவரங்களில் 27 கைதிகள் கொல்லப்பட்டும் 40ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் இருந்தனர். போதைப்பொருள் மற்றும் கைத்தொலைபேசிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் வேட்டையில் அதிரடிப்படையினரும் சிறைச்சாலைப் பாதுகாப்பு அதிகாரிகளும் இறங்கிய போதே கலவரங்கள் வெடித்தன.

### வட மாகாண தேர்தல்களில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் — பிரித்தானியா வேண்டுகோள் —

இவ்வருட இறுதியில் நிகழும் என எதிர்பார்க்கப்படும் வட மாகாண தேர்தலினை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்களை கட்டாயமாக நியமிக்குமாறு பிரித்தானியா வேண்டுகோள் விடுத்துள்ளது. பிரித்தானிய அரசின் வெளிவிவகாரப் பிரிவின் சிரேட்ட அமைச்சர் சயிடா வர்ஷி "தாங்கள் உண்மையானதும், நியாயமானதுமான தேர்தல் ஒன்றே வடக்கில் நிகழவேண்டும் என விரும்புவதாக" தெரிவித்தார். கடந்த வாரம் உலகத்தமிழர் பேரவையால் பிரித்தானிய பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் அவர் இக்கருத்தை வெளியிட்டிருந்தார். உலகத்தமிழர் பேரவையின் 3வது ஆண்டுக் கொண்டாட்டங்களில் இவருடன் இன்னும் பல பிரித்தானிய அரசியல் வாதிகளும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இராசதந்திரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் விளையாட்டு செய்திகள்

## பாண்டிங், ஹஸ்சி ஓய்வால் ஆஸ்திரேலியாவுக்கு பாதிப்பு

- டீன் ஜோன்ஸ் -



கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி ஐதராபாத் டெஸ்டில் இன்னிங்ஸ் தோல்வி அடைந்தது. 4 டெஸ்ட் கொண்ட தொடரில் அந்த அணி 2 டெஸ்டில் தோற்றது. இன்னும் 2 டெஸ்ட் நடைபெற உள்ளது. இந்திய மண்ணில் ஆஸ்திரேலிய அணி தொடர்ந்து 5-வது தோல்வியை தழுவி உள்ளது. இதனால் ஆஸ்திரேலிய அணியை அந்நாட்டு ஊடகங்கள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. தொலைக்காட்சி வர்ணனையாளரும், ஆஸ்திரேலியா முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரருமான டீன் ஜோன்ஸ் ஆஸ்திரேலியாவின் தோல்வி குறித்து கூறியதாவது..

பாண்டிங், மைக் ஹஸ்சி ஓய்வு பெற்றதால் ஆஸ்திரேலிய அணி பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. ஹஸ்சி மிகசிறந்த வீரர் ஆவார். சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான அவர் இல்லாததால் அணித்தலைவர் கிளார்க் மிகவும் திணறுகிறார். கிளார்க் களம் வரும்போது மிகவும் சலித்த நிலையில் காணப்படுகிறார். இதனால் அவர் 4-வது வீரராக ஆடுவது நல்லது. நான் ஏற்கனவே கூறியதுபோல ஆஸ்திரேலிய அணி மிகப்பெரிய சுற்றுப் பயணமான இந்தியாவுக்கு வரும்போது தன்னை முழுமையாக தயார்படுத்திக் கொள்ளவில்லை. சொந்த மண்ணில் வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான ஒருநாள் தொடரை முடித்த பிறகு இந்தியா வந்துவிட்டது. அஸ்வின் பந்தை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அறிந்து இருக்கவில்லை. ஐதராபாத் டெஸ்டில் ஆஸ்திரேலியாவின் ஆட்டம் உப்புச்சப்பு இல்லாமல் இருந்தது என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம். என்று டீன் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

## துபாய் ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச் சாம்பியன்

துபாய் ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா)-6-ம் நிலை வீரரான தாமஸ் பெர்டிச் (செக்குடியரசு) மோதினார்கள். இதில் ஜோகோவிச் 7-5, 6-3 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று சாம்பியன் பட்டம் பெற்றார். 4-வது முறையாக ஜோகோவிச் (5 போட்டி) துபாய் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். இதற்கு முன்பு 2009, 2010, 2011 ஆண்டுகளில் பட்டம் வென்று இருந்தார். ஒட்டு மொத்தமாக அவர் கைப்பற்றிய 36-வது பட்டம் இதுவாகும். ஜோகோவிச் தொடர்ந்து 18 ஆட்டத்தில் வென்று உள்ளார். பெர்டிச் அரை இறுதியில் பெடரரை வீழ்த்தி இருந்தார். ஆனால் இறுதிப் போட்டியில் அவரால் ஜோகோவிச்சை சமாளிக்க இயலவில்லை.



## ஆசிய தடகள போட்டிகள் கொழும்பில்

இவ்வருடம் மே மாதம் 18ம் திகதி சென்னையில் நடைபெறவிருந்த ஆசிய தடகள போட்டிகள் கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்வதற்கு தமிழ் நாடு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகவும் இக்காரணத்தினாலேயே இப்போட்டிகள் இலங்கைக்கு மாற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## குழந்தை பராமரிப்பு வழக்கு: தில்சான் ஆஜராக நீதிமன்றம் உத்தரவு



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் தில்சான். முன்னாள் அணித்தலைவரான இவர் 2-வது திருமணம் செய்ததால் அவரது முதல் மனைவி நிலங்கா விதங்கா தில்சானை விவாகரத்து செய்தார்.

இந்த நிலையில் குழந்தை பராமரிப்புக்காக தில்சான் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் மாதம் தர வேண்டிய ரூபா இருபதாயிரத்தை வழங்கவில்லை என்று விதங்கா கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான உ-வது டெஸ்ட்: இந்தியா இன்னிங்ஸ் வெற்றி

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஐதராபாத்தில் நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 237 ஓட்டங்களில் சுருண்டது. இந்தியா முதல் இன்னிங்சில் 503 ஓட்டங்கள் குவித்தது. புஜாரா இரட்டை சதமும் (204 ஓட்டங்கள்), முரளிவிஜய் சதமும் (167) அடித்தனர். மேக்ஸ்வெல் 4 விக்கெட்டும், டோகர்ட்டி 3 விக்கெட்டும் கைப்பற்றினார்கள். 266 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை விளையாடிய ஆஸ்திரேலியா 3-வது நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 74 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. எட்கோவன் 26 ஓட்டங்களுடனும், வாட்சன் 9 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். செவ்வாய்க்கிழமை (05.03.2013) 4-வது நாள் ஆட்டம் நடந்தது. இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க மேலும் 192 ஓட்டங்கள் தேவை. கைவசம் 8 விக்கெட் என்ற நிலையில் ஆஸ்திரேலியா தொடர்ந்து ஆடியது. வாட்சன் 9 ஓட்டங்களில் இஷாந்த்சர்மா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் கிளார்க் 16 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். அவரது விக்கெட்டை ஜடேஜா கைப்பற்றினார். 108 ஓட்டங்களில் அந்த அணி 4 விக்கெட்டை இழந்து பரிதவித்தது. இதையடுத்து களமிறங்கிய ஆஸ்திரேலியா வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க, 131 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் இந்திய அணி 135 ஓட்டங்கள் மற்றும் ஒரு இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் தமிழக வீரர் அஸ்வின் 5 விக்கெட்டுகளையும், ஜடேஜா 3 விக்கெட்டுகளையும், இஷாந்த் சர்மா 1 விக்கெட்டும் கைப்பற்றினர். ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட் கூட எடுக்கவில்லை. இந்த வெற்றியின் மூலம் 4 டெஸ்ட்டுகள் கொண்ட இந்த தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.



## ஓய்வை அறிவித்தார் திலான் சமரவீர

இலங்கை அணியின் சிரேஷ்ட மட்டைப்பந்து வீரர் திலான் சமரவீர சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் தனது முடிவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் சிறப்பான ஆளுமைகளை வெளிக்கொணராத நிலையில் திலான் இத்தகைய முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நடைபெற்றுவரும் பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் திலான் சமரவீரவை அணியில் தேர்வுக்குழு சேர்த்துக்-கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முப்பத்தைந்து வயதான திலான் சமரவீர இலங்கை சார்பாக 81 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 5462 ஓட்டங்களை தலா 48.76 என்ற சராசரியில் பெற்றிருந்தார். இதில் 14 சதங்களும், 30 அரைச்சதங்களும் உள்ளடங்குகின்றன. இதேவேளை 53 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் இவர் பங்குபற்றியிருந்தார்.



All Printing Works...
Now At Bus Stand
Digital Printing, Screen Printing, Offset Printing
Visiting cards, Wedding, T-Shirt, Invitations,
Other Invitations, Book Binding, Laminating,
Type Setting, Photo Editing & All Printing...
COLOR-PIX Digital
We do Best...
Mobilink Enterprises, 01/A Bus Stand, Trincomalee.
Call : 0712828488, 0771270015

COME HOME STATIONERS
Whole Sale and Retail Dealers in All Type of Office Stationery and School items.

No.109, Main Street, Trincomalee.
Tel/Fax: 026 2222611
077 4447021

SS Digital's
Printers for all requirements
இப்பொழுது திருமலையிலும்

சிறந்த வடிவமைப்பு
தகுந்த விலை
சிறந்த தரம்
அனைத்துவிதமான அழைப்பிதழ்களும் அச்சிடுவதற்கான சிறந்த தேர்வு
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 09. 03. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.